
# திருக்கோயில்



மார்ச்
2003

விலை
ரூ 7.00

இராமேஸ்வரம்





# திருக்கோயில்


திங்கள் இதழ்



தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்ரபானு - மாசி | மணி |
| --- | --- | --- | --- |
| 45 | | மார்ச்சு 2003 | 3 |



சிறப்பாசிரியர்

திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பிஎச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.

கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

அருள்மிகு சிவபெருமான், உமாதேவி,

பாலவிநாயகர், பாலமுருகன்

## பொருளடக்கம்


சிவபுராணம் - திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. (ஓய்வு)

சிந்தனை விதைகள் - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

திருஞான சம்பந்தர் பாடியருளிய இரண்டாம் திருமுறை - முனைவர் த. அமிர்தலிங்கம்

அருளாளர் யார் எனக் கண்டுபிடியுங்கள்?

தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ? (நீதிக்கதை) - கலைமாமணி மா. இலட்சுமணன்

நிலா வழிபாடு - டாக்டர் டி. செல்வராஜ்

ஒளிந்திருக்கும் ''நான்'' யாரோ? - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

பூசலாரும் திருநின்றவூரும் - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

மனிதப் பிறவியின் நோக்கம் - முனைவர் கோமதி சூரியமூர்த்தி

தீராப்பிணி தீர்க்கவல்ல வைத்தியநாதர் - ஜி. வெங்கடேசன் M.E.



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :



உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : 28279407



# சிவ புராணம்

– "திருமந்திரச் செம்மல்" திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப (ஓய்வு)

**இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க!**

சென்ற இதழிலே தலைவனாகவும் நாத பிரம்ம மாகவும் விளங்கிய எம்பெருமானின் தாள்களை வாழ்க என வாழ்த்திய மணிவாசகப் பெருமாள், அருள் நிலையில் தம்மை ஆழப்படுத்திப் பெற்ற திருவருள் அனுபவத்தைக் கண்டு வியந்து அதில் நனைந்துருகி உருகி இப்பேற்றைக் கொடுத்த இறைவா! நீர் என் நெஞ்சில் இமைப்பொழுதும் நீக்கமற நிலைப் பெற்றதை உணர்ந்தேன் என்று உணர்ந்து வாழ்த்து கிறார்.

நெஞ்சம் உள்ளம் எனவும் பொருள்படும். நெஞ்சகத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அகக் கருவிகள் உள்ளன. அகக்கருவிகள் நான்கும் சேர்ந்து நெஞ்சமாகிறது. நெஞ்சமே உள்ளம். உள்ளத் தில் கருத்துகளும் இச்சைகளும் பிரதிபலிக்கக்கூடும். அகக் கருவிகளால் கிடைக்கும் அனுபவமும் உள்ளத் தில் இடம் பெறுகிறது. அகக்கருவிகள் அந்தக்கரணங் கள் என்றும் சொல்லப்படும். அந்தக்கரணங்களுள் முதன்மையானது மனம். மனத்தில் எண்ணங்களும் கருத்துக்களும் உந்தப்பட்டு எழுச்சி பெற்று வெளி வந்து பிரதிபலிக்கின்றன. இவை வெளி விஷயங் களைச் சேகரிப்பதால் பிரதிபலிக்கிறது. சேகரித்த விஷயங்களைப் பாகுபடுத்தி தொகுத்த செய்திகளை புத்தி (Intellectual) பார்வையிட்டு ஆய்வு செய்கிறது. ஆய்வு செய்ததை சித்தம் நெறிமுறைப்படுத்தி, நடு நிலையில் எடுத்துச் சொல்கிறது. செயலாக வெளிப் படுத்துவது அகங்காரம்.

நெறிமுறைப்படுத்தும் சித்தத்தில் ஆழமான இறைமை, மெய்ம்மை ஊடுருவி விரவி நின்றால் சித்தம் தெளியும். தெளிந்த சித்தத்தில் இறையருள் பிரதிபலிக்கும். எது மெய்ம்மை, எது பொய்ம்மை யென்று எடுத்துச் சொல்லும்: அந்தக் கரணத்தின் அடிப்படையான மனதிற்கு உண்மை உணர்த்தி இதை ஏற்றுக்கொள்: இதை ஏற்றுக்கொள்ளாதே என்று அறிவுறுத்துவது இறைமை. இறைமை நெஞ்சில் இடம் பெறுகிறது. நெஞ்சில் இறைவன் முழுமையாக விரவி நின்ற போது வாக்கில் வெளிப்படும். இறைமை இவ்வாறு ஆழமாக பிரதிபலித்துக்கொண்டேயிருந் தால் செயலிலும் வெளிப்படும். வாக்கும் மனமும் செயலும் ஒன்றுபடும். இது அன்பு வழிநிலை. யோக நிலையில் வாக்கும் மனமும் செயலும் ஒன்று படுத்தப்பட வேண்டும். 30.1.1948 ஆம் நாளன்று நாட்டு மக்களுக்காக பெரிய ஆன்மீக வாழ்வை நடத்திய மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை கோர முடிவை எதிர்நோக்கும் போது மரணத் தருவாயில் 'ஹே ராம்' என்ற வார்த்தை வெளிப்பட்டது இதற்குப் பொருத் தமான உதாரணமாகும். காந்தியடிகளின் நெஞ்சில் இறைவுணர்வு நிறைந்து இமைப்பொழுதும் நீங்காமை யால் வந்த நாமமே 'ஹே ராம்'. அவரது உயிருக்கு உயிராகயிருந்து நெஞ்சில் நிறைந்திருந்த அந்நாமம் வெளிப்பட்டது. இறைவுணர்வு மனதில் முழுமையாக விரவி நின்றபோது அகக்கருவிகளிலும் நிறைந்து கருவிகளும் இறைமைமயமாகின்றன. சூட்சும கருவி களிலிருந்து இறைமை ஒளிக்கதிர்களாக தூல உட லுக்கு உந்தப்பட்டு உடலுக்கு அப்பால் ஒளி வீசத் தொடங்குகிறது. இவ்வொளிக் கதிர்கள் சுற்றுப்புற சூழ்நிலைகளை மாற்றம் பெறச்செய்கின்றன. சுற்றி யுள்ளவர்களின் மனத்தையும் அமைதி பெறச்செய் கின்றன. இந்நிலையையே காந்தியடிகள் பெற்றார்.

மணிவாசகர் சிந்தையும் இறைச்சிந்தையாகவே இருந்திருக்கிறது. நம்முள்ளே இறைவன் இருக்கின் றான் என்று அருளாளர்கள் சொல்கிறார்கள்.

உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ள முந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே

எனும் திருமந்திர பாடலின் படி நெஞ்சில் இறைவன் நிறைந்து கலந்திருக்கின்றான். உயிரோடும் கலந்திருக் கின்றான் - இணைந்திருக்கின்றான். உள்ளத்தில் இணைந்திருப்பது உயிர். உயிரில் விரவியுள்ளது இறைமை. இறைமையுணர்வு ஓங்கிட எங்கும் எதிலும் அவனைப் பார்க்க முடியும்.

இவ்வாறு இறையுணர்வு பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைக்குச் சென்றார். தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார். தேவாசிரிய மண்டபத்தில் அருளாளர்களும் குறிப்பாக இந்திரன் முதலாய தேவர்களும் சேர்வார்கள். அங்கு இறைவனைக் கண்டு போற்றி வணங்கிச் செல்வார்கள். அத்தகு மண்டபத்தில்

நின்ற சுந்தரமூர்த்தி நாயனார், அடியார்க்கு அடியனாக நின்று அடியார்களைப் போற்றிப் பாடவேண்டுமென விழைந்தார். அசரீரியாக ஒரு குரல் எழும்புகின்றது. சரீரத்திற்கு அப்பாற்பட்டது அசரீரம். அசரீரம் சூட்சும மானது. சூட்சும நிலையில் இருப்பது. சூட்சும நிலையில் இருந்து எழுப்பப்படும் ஓசை அசரீரி. இவ்வசரீரியாக தில்லையில் இறைவன் ஆணை பிறக்கிறது. அதன் உதயமே,

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'

என்பது. இதுவே பின் திருத்தொண்டத் தொகை பாட லாக எழுந்தது. இப்பாடலில் சுந்தரர், அருளாளர் களை அடியார்களாக ஏற்றுக்கொண்டு அவர்கள் திருவுள்ளத்திலே இறைவனைப் பார்க்கிறார். 'இறைவா! எல்லோர் உடலிலும் நீர் இருக்கும் உண்மையை உணர்த்தினீர்!' எனக் குழைகின்றார். இறை அனுபூதி என்ற நிலையிலே தன்னை தூய்மை செய்து கொண்ட தன் வாயிலாக பெற்ற அனுபவம். இறைவனைத் தனதாக்கிக்கொண்டு இறை நெறியிலே சார்வது சைவ நெறி. சைவ நெறியில் அகமுக பூசை செய்து பெற்ற அனுபவ அடிப்படையில், யோகம் என்ற முறையில் சதா சிந்தித்து, ஆழ்ந்து சென்று சற்றும் இடை விடாமல் இறைமை வுணர்வோடு நிற்பது தொண்டு நெறி. தொண்டு நெறி இறைவனைச் சார்ந்து இறைவ னுக்காகச் செய்வது.

ஆனால் திருத்தொண்டு நெறி வேறு. இறைவன் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் இமைப் பிரியாது நீக்கமற நின்றவன் என உணர்ந்து, உள்ளத் திலே இருக்கக் கூடிய விருப்பங்கள், கல்வித் திறன், திறமை இவற்றைக் கடந்து மாறுபட்டு, இறையன்பு உள்ளத்தில் நிரம்ப தியாக உணர்வுடன் உயிர்கள் உய்யச் செய்வது திருத்தொண்டு நெறி. திருத்தொண்டு நெறி எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்து செய்வது.

ஆனால், மகாத்மா காந்தியடிகள் தொண்டு நெறி வேறு. அவர் இறைவனைத் தன்னுள் வைத்த தோடு இறைவனை எங்கும் பார்த்தார். தனக்காக வும் இறைவனுக்காகவும் அல்லாமல் மக்களோடு கலந்து அவர்கள் துன்பங்களைத் தானும் பகிர்ந்து கொண்டார். அப்பர் அடிகளும்,

என்கடன் பணிசெய்து கிடப்பதே
நின்கடன் அடியேனைத் தாங்குதல்

என்ற நியதிப்படி திருத்தொண்டுக்காக இறைவனுடன் நட்புக்கொண்டார்: திருவருளை நாடினார். திரு வருளால் இறைவன் பணிக்கக்கூடிய பணியைச் செய்தேயாக வேண்டும் என்றும் உணர்கின்றார். அருளாளர்களால் அக விளக்கு போட்டுக் காட்டப் பட்டு மேல் மேல் செல் என்ற நெறியிலே அனுபவம் பெற்றாலும் உயிர் இரக்கம் என்று சொல்லக்கூடிய ஒன்றிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டால் யோகம் புரிவதால் கிடைக்கக்கூடிய துரியாதீதம் சுத்த துரி யாதீதம், சிவ துரியாதீதம் போன்ற அனுபவங்கள் கிடைக்கும், என்பது வெள்ளிடை மலை. கேவலம், சகலம் சுத்தம் என்ற மூன்று நிலைகளில் சுத்தத்திற்கு மேலுள்ள நிலை குரு நிலை. இதுவே சிவ நிலை. இந்நிலையில் இறைவன் உள்ளத்தில் முழுமையாக நிரம்பி அகக்கருவிகளை ஆக்கிரமித்துக் கொண்டு தூலமாக சரீரத்தில் விரவி சரீரத்திற்கு வெளியே ஒளி அதிர்வுகள் தோன்றத் தொடங்கி பிறரையும் தாக்கும். இவ்வொளி அதிர்வுகளுக்கு சுற்றியுள் ளோர் ஆட்பட்டு அன்பும் சாந்தமும் பெறுவார்கள். இவ்வாறே காந்தியடிகளும் தம் உடலிலிருந்து வெளி வந்த ஒளி அதிர்வுகளால் உலக மக்களைத் தன் வச மாக்கி சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார். இராம லிங்க அடிகளுக்கு இவ்வித அனுபவத்தால் சீவ காருண்யம் தழைத்து ஓங்கிற்று. இதுவே அன்புநிலை.

அன்பு மேலிட மேலிட அருளும் வளர்கிறது. உள்ளத்தில் அருளும் அன்பும் நிரம்பி வழிந்து ஒளி அலைகளாக வெளிப்படுகிறது. இவ்வருள் அலை கள் சுற்றியுள்ளவர்களையும் சுற்றுப்புற சூழ்நிலை களையும் அமைதியாக்கமாகச் செய்கிறது. உள்ளத் தின் மேலுள்ள உடலின் அங்கங்களைத் தொட்டு வெளிவருகின்றது. இவ்வருள் கண்களின் மூலமாக வும் வெளிப்படுகிறது. கண்கள் அதனால் பிரகாசிக் கின்றன. இவ்வனுபவ உண்மை இறைவன் 'உள்ளத் தில் இமைப்பொழுதும் நீங்காதான்' என்பதை தெளி வாக்குகிறது.

எடுத்துக்காட்டாக இரண்டு ஆண்டுகள் நிரம்பி மூன்றாம் அகவையை எட்டியிருந்த ஞான சம்பந்தர் சீர்காழி சிவன் கோயிலின் திருக்குளக் கரையில் தன் தந்தையால் அமர வைக்கப்படுகிறார். தந்தை சிவபாத இருதயர் ''அகமருடண செபம்'' புரிந்து குளத்தினுள் திருமுழுக்காட மூழ்கினார். குழந்தை சம்பந்தர் தந்தையை நோக்கி அழாமல் கோபுரத்தின் மேல் உமாதேவியுடன் அமர்ந்திருந்த எம்பெரு மானைப் பார்த்து அழுகின்றது. தன்னுடைய முற் பிறவி நினைந்து அழுதமையால் தான் உமாதேவி யால் ஞானப்பால் ஊட்டப்பட்டு பாலோடு சிவ ஞானமும் கலந்து வாயுட்செல்ல சிவஞானம் பெறு கிறது. ஞான அனுபவத்தால் முதிர்கிறது. முழுமை யாக சிந்திக்கப் போனால் ''உன்னைத் தவிர வேறொன்று மில்லை இறைவா!'' என்ற உணர்வு மேலிட்டு அழுதமையால் சிவஞானம் குழைந்த

பாலால் அருட்பெரும் சிவஞானத்தைப் பெற்றார் ஞானசம்பந்தர். தான், தன்னைச் சுற்றியுள்ள உலகம், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன், இறைவனது பேரவையில் அடியார்கள், அடியார்கள் இறைவனைப் பிரதிபலிப்பது - இவற்றை ஒரு சேர பார்க்கிறார். பெற்ற சிவஞானத்தால் தமிழ் பதிகங்களாக, திருக்கடைக் காப்பாக பதினைந்து ஆண்டுகள் உலகிற்கு ஈந்தார். 'அவனுரை எனதுரையாகும்' என்ற உணர்வோடு பேசியும் செயலும் பட்டார். இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காத இறைவுணர்வால் வெளிப்பட்ட வாக்கியங்களே இவை. தில்லைக்குச் சென்று சிதம்பர நடராசனை தரிசிக்கும் போது சிவஞானம் முழுமையாகப் பெற்றார். பொற்சபையில் நடனம் கண்டு அனுபவிக்கும் போது உள்ளுணர்வோடு சிவஞான அனுபவத்தை நேரடியாக கண் எதிரே கண்டார். பக்குவ முற்ற உள்ளத்தில் அன்பு வழிய, அவ்வன்பு அகக் கருவிகளில் விரவி வெளிவந்து உடலின் மீது பரவி வெளிவந்தவுணர்வோடு தான் இறைவனைக் கண்டார். இந்நிலையே நெஞ்சில் நீங்காத இறை நிலை. இவ்விறைநிலை உணர்வோடு உள்ளத்தில் எழக் கூடிய முழுமையான இறைசக்தி நிரம்பியதால் பல அற்புதங்களைப் படைத்தார் திருஞானசம்பந்தர்.

இவ்வற்புதத்தில் ஒன்றே மயிலையில் அங்கம் பூம்பாவையை உயிர்ப்பித்தது. சிவநேசரின் மகள் அங்கம் பூம்பாவையை உயிர்ப்பித்தது, உயிரையும் உடலையும் சேர்த்து அருட்சக்தியின் வேலை. அதுவே பிறப்பு என்றும் பேசப்படுகிறது. ஞான சம்பந்தர் இறைவுணர்வு சம்பந்தத்தோடு அங்கம் பூம்பாவை உடலை ஒன்றுவித்து உடலுடன் உயிரையும் கூட்டி உயிர்ப்பித்தது பிறவி கொடுத்ததற்கு ஒப்பானது. இச் செயல் இறைவனை அணைந்து அவனாகிச் செய்யும் செயல்.

அவனே நான் என்பது வேறு : நானே அவன் என்பது வேறு. நானே அவன் என்ற வாக்கியத்தில் ஆணவம் கலந்துள்ளது. அவனே நான் என்ற வாக்கியத்தில் இறையுணர்வு இருக்கிறது. இறைவனை ஒன்றத் தேடிச்செல்வது யோகநிலை.

மாயனை நாடி மனநெடுந் தேரேறி
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயனும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனே

என்பர் திருமூலர். நம்முள் உள்ள இறைவனைத் தெரிந்து கொள்ளாதது நம் குற்றமே. அறியாமையே அதன் மூல காரணம். ஆணவத்தால் நம்மையே நினைப்போமேயன்றி பிறரை நினைக்க மாட்டோம்.

திருமறைக்காட்டில் வேதங்கள் இறைவனை தரிசித்து விட்டு கோயில் கதவை மூடிவிட்டன என்பது ஐதிகம். திருநாவுக்கரசரின் பாடல்கள் அக்கதவைத் திறந்தது. இறை தரிசனத்திற்குப் பின் நான்கு வரி கொண்ட ஞானசம்பந்தரின் பாடல் திறந்த கதவை மூடிற்று. இங்கு இறை ஞானத்தால் எழுந்த பதிகங்களின் ஆற்றலே கதவைத் திறந்து மூடின.

ஆனால் உள்ளத்தில் இருக்கக்கூடிய அறியாமை என்கின்ற கதவு திறக்கப்பட வேண்டும். பக்குவ நிலை வளர வளர ஒரு அடி மேலே சென்று திறந்த கதவைப் பார்த்தனர் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும். அகக் கதவைத் திறக்க அருளாளர்களை நாடவேண்டும். அக்கதவைத் திறக்கும் நெறியில் நம்மை தீவிரப் படுத்திக் கொண்டால் ஞான அனுபவம் கிடைக்கும்.

கன்னியொருசிறை கற்றோர் ஒரு சிறை
மன்னிய மாதவஞ் செய்வோர் ஒரு சிறை
தன்னியல் புன்னி யுணர்ந்தோர் ஒரு சிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே.

என்கிறது திருமந்திரம். கல்வி ஒருவாறு உணர்வுகளை ஒருமுகப்படுத்தி உலகை நோக்கச் செய்கிறது. அது வினைக் கடலுள் ஆழ்த்துகிறது. கன்னியர் மங்கையர் என்ற பொருளோடு கொள்ளாது மனை, இதர செல்வங்கள் பதார்த்தங்களையும் குறிக்கும். அதன்மீது உண்டான மோகத்தினையும் குறிக்கும். இதனை 'அநார் பாவன' என்பர். ஆழ்ந்த நிலையில் உடலும் உலகமும், நான் என்று சொல்லக் கூடியதும் உண்மையல்ல; நானே கடவுளுமல்ல: கடவுளே நான் என்ற உணர்வு மேலோங்குவதே தன்னியல்பு உணர்வு என்ற சிறையிலிருந்து மீளுவதாகும். இச் சிறையிலிருந்து மீள ஞானமும் திருவருளும் கூட வேண்டும். ஊஞ்சலுக்கு கீழே தரை ஆதாரமாக யிருந்து ஆடி விழுந்தவரை அதிகமாக ஆபத்திற்கு உள்ளாகாமல் தாங்குவது போல இறைவன் தரை போன்று ஆதாரமாய் தாங்கிப் பிடிக்கின்றான். ஆணவத்தைக் கடந்தால் தான் அவனாகலாம். அவனே தானாக அருட்சக்தி சிறிது செலவழித்தால் போதும்: அவனே தானாய் இறைமை நிரம்பி அன்பு வழிய ஒளி அதிர்வோடு அருள் மயமாய் நின்ற மணிவாசகப் பெருமான், இறைமை வுணர்வுடன் இறைவனை, 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!' என்று உணர்ந்து, அனுபவித்து அவரது திருவடிகளை வாழ்த்துகிறார்.

***

# சிந்தனை விதைகள்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., (ஓய்வு)
செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வருவாய் மேம்பாட்டுக் குழு, தமிழக அரசு.

*(முன் தொடர்ச்சி)*

## கடவுள்

29. பக்தி செலுத்துபவர்களுக்கு, கடனைத் தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதி கிடைத்தவர்கள் முழுக் கடனையும் அடைப்பதற்குக் குறிப்பிட்ட காலமாவதுபோல் முக்திப் பேறு கிடைப்பதற்கும் காலம் ஆகும். ஆனால் பிரபத்தி (சரணாகதி) செய்பவர்களுக்குக் கடன் முழுவதும் தள்ளுபடி செய்யும் சலுகை போல் நடப்புப் பிறவியிலேயே முக்திப்பேறு கிடைத்துவிடும். இருந்தாலும் பிரபத்தி செய்தபிறகு செய்யப் பட வேண்டிய கடமைகள் கடுமையானதாக உள்ளது.

30. முக்திப்பேறு அடைய வேண்டும் என்ற நாட்டமுடையவர்களுக்கு ஓரளவு தகுதியிருந்தால் முழுத் தகுதியையும் பெறுவதற்கு இறைவன் அருள்புரிகிறார்.

31. ஆற்று மணலை எண்ண முடியாதது போன்று இறைவனுடைய உண்மைத் தன்மையை முற்றிலுமாக அறிந்து கொள்ள முடியாது.

32. எந்தத் தாயும் கடவுளுக்கு நிகராக முடியாது. கடவுளுக்கு நிகர் கடவுள் தான். என்றாலும் பெற்ற பிள்ளைகளுக்குத் தாய் கண்கண்ட தெய்வம்.

33. நாம் செய்த வினைக்குத் தகுந்தவாறு மட்டுமே பயனைத் தரும் கடவுளை செய்த வேலைக்குக் கூலி கொடுக்கும் முதலாளி என்றுதானே கருத வேண்டும், கருணைக் கடல் என்று எப்படிக் கருத முடியுமென்று கேட்பது தவறு. நமக்காக தனு, கரணம், புவனம், போகம் ஆகியவைகளைக் கொடுத்திருப்பதால்தான் கருணைக் கடல் என்கிறோம்.

34. கடவுள் செய்கின்ற ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் என்பது மூலப் பிரகிருதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகிற பிரபஞ்சத்தை ஒடுக்குவதாகும். உயிர்கள் இளைப்பாறுதல் பொருட்டே இது நிகழ்கிறது.


35. இறைவன் அநாதி, உயிர்கள் அநாதி, இறைவன் ஒருவன். உயிர்கள் எண்ணற்றவை. இறைவனால் எண்ணற்ற உயிர்களுக்கு உடல் கொடுக்கப்பட்டு அவைகள் பக்குவம் பெற்று இறைவனுடன் ஐக்கியமானாலும் இனி வேறு உயிர்கள் இல்லை, இறைவன் மட்டுமே தனித்து நிற்பான் என்கிற நிலை ஏற்படாது என்று சொல்லப்படுகிறது. இந்த ரகசியம் யாருக்குத்தெரியும் என்று தெரியவில்லை.

36. பக்தர்களுடைய கோரிக்கைகளை நேரிடையாக இறைவன் தானே பரிசீலிக்கிறார். அவருக்கு வேண்டிய மூலச் சான்றிதழ் உண்மை அன்பு ஒன்றுதான்.

37. குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்றால் இன்னும் இன்றும் குரங்கு குரங்காகத்தான் இருக்கிறது. மனிதன் மனிதனாகத்தான் இருக்கிறான். சர்வ வல்லமை படைத்த இறைவனால் எந்த உயிர்களுக்கும் எந்தவித உடலையும் கொடுக்க முடியும். பரிணாம வளர்ச்சிக்கு இடமில்லை.

38. இறைவன் சங்கல்பத்தின்படி நமக்கு நல்ல நேரம் இருந்தால் கெடுதல் செய்ய இருந்தவர்கள் கெடுதல் செய்யுமுன் கெட்டுப் போவார்கள். நல்ல நேரம் இல்லை என்றால் உதவ நினைத்தவர்கள் உதவுவதற்குமுன் ஓய்ந்து விடுவார்கள்.

39. அனைவருக்கும் பயன்தரக்கூடிய பொது நன்மைகளை (குறிப்பாக மழை, உலக சமாதானம்) கடவுள் அறியாதவரல்ல. அவரை அதற்காக ஞாபகப்படுத்த வேண்டியதில்லை. தனியாகவோ



கூட்டமாகவோ எதுவும் செய்ய வேண்டிய தில்லை.

40. சூரிய ஒளி வீட்டில் பரவியிருக்கிறதென்றால் சூரியனே வீட்டில் இருக்கிறது என்பதில்ல. அதுபோல் கடவுள் சக்தி அந்தரியாமியாக (கண்ணுக்குத் தெரியாமல்) நம்முள் பரவியிருக் கிறது. இதைத்தான் நம்முள்ளேயே கடவுள் குடி யிருக்கிறார் என்று சொல்கிறார்கள்.

41. இறைவன் ஒருவரே சுதந்திரர். உயிரினங்கள் அனைத்தும் யாருக்காகவாவது எதற்காகவா வது பயப்பட்டு அல்லது கட்டுப்பட்டுத்தான் வாழவேண்டியிருக்கிறது.

42. குறிப்பிட்ட சில பெயரைத் தாங்கியுள்ள அர்ச்சா மூர்த்திகளை முழுமுதற் கடவுள் என்றும், கிராம தேவதைகள், காவல் தெய்வங்கள் ஆகியவை களை ஏவல் தெய்வங்கள் என்றும் சொல்வது பொருத்தமல்ல. இதயசுத்தியோடு எதை வழி பட்டாலும் பெறப்போகிற பலனில் வித்தியாசம் இருக்காது.

43. கடவுளுக்கு எல்லா மொழியும் தெரியும். முருகன் ''தமிழ்க் கடவுள்'' என்று சொல்வது தமிழர்கள் வாழும் பகுதியில் போற்றி வணங்கப்படும் ''அர்ச்சையே'' முருகனாகும்.

44. மழையின்மையால் விரக்தியில் மக்கள் விநோத மான பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்கள். இத னால் விசேஷப் பயன் ஏதும் விளையப் போவ தில்லை. மழை உயிரினங்களுக்காக கடவுள் தரும் பரிசு; தகுந்த நேரத்தில் அந்தப் பரிசை அளிப்பார் என்று காத்திருக்க வேண்டும்.

45. முக்தியை நாடிச் செல்லும் பயணம் நெடியது. குறிக்கோளுடனும் உறுதியுடனும் இருந்தால் கூட கடந்து செல்வதற்குக் காலதாமதமாகும். வாகனம் இருந்தால் எப்படி நீண்ட தூரத்தையும் விரைவில் கடக்க முடியுமோ அதுபோல் ஆத்ம சாதகன் நம்பிக்கை மீது இறைவனுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் நீண்ட பயணத்தை விரை வில் முடிக்க வாகனம் உதவுவதுபோல் வாகனம் போன்ற உதவியை அளிப்பார்.

46. விற்பவன் தன்னிடம் இருக்கும் பொருளின் விலை ஏறவேண்டுமென்றும், வாங்குபவன் அந்தப் பொருளின் விலை இறங்க வேண்டு மென்றும் இறைவனை வழிபட்டால் இறைவ னது தீர்ப்பு ஒருதலைபட்சமாக இல்லாமல் சரியானதாக இருக்கும்.

47. இறையனார் (கடவுள்) முதற் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமை வகித்தார் என்றால் அவரே தூல உட லுடன் வந்து தலைமை தாங்கினார் என்று பொரு ளல்ல. இறைவனே அனைத்தையும் அறிந்தவர் ஆகையால் அவரையே மானசீகத் தலைவர் என்று ஏற்றுக் கொண்டு தமிழ்ச் சங்கம் இயங்கி வந்தது என்று கருத வேண்டும்.

48. தட்டுத் தடுமாறி தவித்து நிற்கும் பக்தனை இறைவன் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்து வாரேயொழிய தடுக்கி விழ வைப்பதில்லை.

49. கடவுள் கருப்பையுள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கிறார் என் றால் இவைகள் எந்தவித சுதந்திரமும் இல்லாது இருப்பதாலாகும். பசி, பட்டினியால் வாடும் மற்ற உயிர்களுக்கு என்ன செய்கிறார் என்ற கேள்விக்குப் பங்கீட்டு முறை சரியில்லை என்று பதில் சொன்னால் திருப்தியில்லாமல் இருக் கிறது. நம் சிற்றறிவிற்கு எட்டவில்லை என்ற காரணத்தால் இறைவனைக் கொடுங்கோலன் என்று சொல்லக் கூடாது.

*(தொடரும்)*

***

# திருஞானசம்பந்தர் பாடியருளிய இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.

*(முன் தொடர்ச்சி)*

வேதங்கள் வழிபட்டு அமைத்துச் சென்ற திருமறைக்காட்டுத் திருக்கோயில் திருக்கதவம் திறக்க நம் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளியதையும், அக்கதவம் மூடவும் திறக்குமாறு இருத்தலை வேண்டி திருக்கதவும் அடைக்க நம் திருஞான சம்பந்த சுவாமிகள் பாடியருளியதையும் சென்ற இதழில் மிக விரிவாகக் கண்டு பரவசப்பட்டோம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கதவம் திறக்க 10 தேவாரப் பாடல்கள் பாடியும் திறக்காமல்,

''அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானிரே!
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே
சுரக்க இக்கதவம் திறப்பிம் மினே!''

என்று பதினோராவது பாடல் பாடி வேண்டிய பிறகே திருமறைக்காட்டு இறைவர் திருக்கதவம் காப்பு நீக்கி யருள் புரிந்தார்.

ஆனால் நம் திருஞானசம்பந்தர்

''சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே''

என முதற்பாடல் பாடிய உடனேயே திறந்திருந்த கதவுகள் ஒன்றாக மூடிக் கொண்ட அற்புதம் நிகழ்ந்து விட்டதையும் அதற்குப் பிறகு திருமறைக்காட்டு இறைவர் திருவருளைப் போற்றித் திருஞான சம்பந்தர் பதிகத்தை நிறைவு செய்ததையும் சென்ற இதழில் காட்டியிருந்தோம்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் சிவ பெருமானின் எல்லையற்ற திருவருளால் அற்புதங் கள் பல புரிந்து நம் அருஞ்சைவம் வளர்த்த ஒப்பற்ற அருளாளர்கள்.

இத்தகைய அருளாளர் திலகமாம் அப்பரடி களுக்கும் ஒரு சிறு மனக்குறை திருமறைக்காட்டு அற்புதம் காரணமாக உண்டாகி விட்டது என்பதை யும், அம்மனக்குறை தீர்க்கவும் இறைவர் மேலும் ஒரு அற்புதம் நிகழ்த்த வேண்டியிருந்தது என்பதை யும் தெய்வச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத் தில் எடுத்துக் காட்டுகின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞான சம்பந்தரும் அற்புதம் நிகழ்ந்த அன்றைய இரவு, தனித்தனியே தத்தம் திருமடத்திற்குச் சென்று துயில் வதற்கு முயன்றார்கள். அப்பொழுது ''நம்மை விட திருஞானசம்பந்தர்மேல்தான் இறைவருக்கு அன்பு அதிகம் போலும். நாம் பத்துப் பாடல்கள் பாடியும் கதவம் திறக்காமல் பதினோராவது பாடல் கெஞ்சிப் பாடிய பிறகே கதவம் திறந்தது! ஆனால் பாலறாவாயர் முதற்பாடல் பாடிய உடனே திருக்கதவம் தாளிட்டுக் கொள்ளும் அற்புதம் நிகழ்ந்து விட்டது! இறைவரின் திருவருள் சிறப் புறப்பெற நமக்கு எப்பொழுது திருவருள் கிட்டுமோ தெரியவில்லையே!'' என்று திருநாவுக்கரசர் துயி லுறாமல் தவித்துக் கொண்டு இருக்கும் பொழுது இறைவரே ஒரு சிவனடியாராக எழுந்தருளி ''எம் முடன் திருவாய்மூருக்கு வாரும்'' என்று அருகிருக்கும் திருவாய்மூருக்கு அழைத்துக் கொண்டு செல்லுகின்றார்.

நள்ளிரவில் வந்து தம்மைத் ''திருவாய்மூருக்கு வா'' என்று அழைத்துச் சென்ற சிவனடியார் வழியில் மறைந்து போகத் திருவாய்மூர் நாதரை வழிபடும் திருநாவுக்கரசு சுவாமிகள் ''நான் இருக்கும் இடத்திற்குத் தேடி வந்து என்னை அழைத்து வந்த காரணம் என் னிடத்தும் குறையா அன்பு எமக்கு உண்டு என்பதை உணர்த்துவது தானோ!'' என்று உளமுருகி இறைவரின் திருவருள் அற்புதத்தை வியந்து போற்றிப் பாடு கின்றார். அப்பதிகத்தில் அமைந்து விளங்கும் பல பாடல்கள் திருமறைக்காட்டு அற்புதத்தைத் தொடர்ந்து திருநாவுக்கரசரிடம் ஏற்பட்ட மனக்குறையை இறைவர் போக்கியருளிய திருவருள் சிறப்பை விளக்கும் வகையில் அமைந்து விளங்குகின்றன.

''எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாஎன்று போனார் அது என்கொலோ?''



''மன்னு மாமறைக் காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவன் ஆமா சொல்லி
என்னை வாவென்று போனார் அது
என்கொலோ?''

திருவாய்மூருக்கு ஒட்டமாய் ஓடி அழைத்து வந்த சிவனடியார் வழியில் காணாமல் போய் விட்டதையும் திருநாவுக்கரசு சுவாமிகள்

''கழியக் கண்டி லேன் கண்எதிரே கண்டேன்
ஒழியப் போந்திலேன் ஒக்கவே ஓட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூர் அடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்றது என்கொலோ?''

''ஒள்ளி யார்இவர் அன்றிமற்று இல்லைஎன்று
உள்கி உள்கி உகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யாரிவர் போலத் திருவாய்மூர்க்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே!''

என வரும் இப்பதிகப் பாடல்களில் எடுத்துக்கூறி வியக்கின்றார்.

''சிவனடியாராக வந்து திருவாய்மூருக்குப் போவோம் வா என்று என்னை அழைத்து வந்த செயல் பொய்யானதா?'' என்றும் கேட்டு நம் திருநாவுக்கரசர்

''மாதே வாகிய வாய்மூர் மருவினார்
போதே என்றும் புகுந்ததும் பொய் கொலோ?''

என்று வினவுவதையும் காணுகின்றோம்.

முன்னம் திருஞானசம்பந்தருக்குத் திருவீழி மிழலையில் வாசியுடன் கூடிய பொற்காசு வழங்கித் திருஞானசம்பந்தர் தம் மனவாட்டம் தீர்க்குமாறு

''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே''

என்று திருப்பதிகம் பாட வாசிதீர்ந்த காசு வழங்கிய இறைவர், அவ்வற்புதம் போலவே திருமறைக்காட்டுத் திருக்கதவம் திறந்து மூடிய அற்புதத்தால் தமக்கு உண்டான மனக்குறையை உணர்ந்து அதனைப் போக்கவே ''திருவாய்மூர்வா'' என அழைத்து வந்து பின் மறைந்துபோன இவ் வற்புத நிகழ்ச்சியையும் நிகழ்த்தியுள்ளார் என மனத் தெளிவு கொள்கின்றார் நம் திருநாவுக்கரசர்.

அதனையும் தாம்பாடியருளியுள்ள திரு வாய்மூர் திருப்பதிகத்தின் ஏழாம், எட்டாம் பாடல் களில் மிகத் தெளிவாகவே எடுத்து விளக்குகின்றார் நம் திருநாவுக்கரசுப் பெருமான்.

''பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார் அவரைப்போல்

தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேனனா
ஓடிப் போந்திங்கு ஒளித்தவாறு என்கொலோ?''

''திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் இந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடையார் இவர் பித்தரே!''

நம் சமயக்குரவர்கள் நிகழ்த்தியருளியுள்ள அற்புதங்களுக்கான அகச்சான்றுகள் அவரவர் அருளியுள்ள தேவாரத் திருமுறைகளிலேயே காணக் கிடைக்கும் அருமைப் பாட்டினை அப்பரடிகளின் மேற்காட்டியுள்ள தேவாரப் பாடல்கள் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு அப்பரடிகள் திருவாய்மூருக்கு இரவோடிரவாகச் சென்ற நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பாலறாவாயரும் ''இதில் ஏதோ ஒன்று உள்ளது'' என்பதாக ஐயுற்று அவரும் உடனே புறப்பட்டுத் திருவாய்மூருக்கு வந்தருளுகின்றார் எனக் கூறுகின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

''அங்கு அவர் ஏகச் சண்பை ஆண்டகை
யாரும் ''அப்பர்
எங்குற்றது?'' என்று கேட்ப ''எய்தினார்
திருவாய் மூரில்
பொங்கிய காதலால் '' என்று உரைத்திடப்
போன தன்மை
சங்கையுற்று என்கொல் என்று தாமும்
அங்கு அணையப் போந்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 595)

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரைத் திருவாய்மூருக்குச் சென்று கண்டபோது திருஞானசம்பந்தரை அருகில் வைத்துக் கொண்டே அவருடைய சிறப்பைப் போற்றும் வகையில்

''திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் இந்நின்றார்''

என்று ''இங்கு நின்றார் திருஞானசம்பந்தர்'' என நமக்கு உணர்த்தும் வகையில் பாடியுள்ள அருமையையும் இப்பாடலில் கண்டு இன்புறுகின்றோம்.

நம் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசு சுவாமிகளை இரவோடு இரவாக அழைத்து வந்த திருவாய்மூர் நாதர் திருவருளைப் போற்றி ''வாய்மூர் அடிகள் வருவாரே!'' ''வாய்மூர் அடிகள் வருவாரே!'' எனப் பதிகத்திலுள்ள பாடல்கள் தோறும் பாடி உருகுகின்றார். ''நட்டராகம்'' பண்ணில் திருஞானசம்பந்தர் திருவாய்மூர் இறைவர் திருவருளை வியக்கும் ''தளிரிளவளர்'' எனத் தொடங்கும் இப்பதிகம் இரண்டாம் திருமுறையில் இலங்கி நம்மை மகிழ்விக்கின்றது.

''அந்நிலை அணைந்த போதில்
அம்பிகை உடனே கூட
மன்னிய ஆடல் காட்டத்
''தளரிள வளரும் பாடிச்
சென்னியால் வணங்கி வாய்மூர்
அரசொடும் சென்று புக்குஅங்கு
இன்னியல் புறமுன் கூடி
இருவரும் போற்றிச் செய்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம், 596)

என்று திருநாவுக்கரசரிடம் ஒரு சிறுமனக்குறை உண்டானதையும், அம்மனக் குறை தீர்க்க திருவாய்மூர் இறைவர் திருநாவுக்கரசரை இரவோடு இரவாக திருவாய்மூருக்கு அழைத்து வந்ததையும், திருஞானசம்பந்தர் தாமும் உடனே திருவாய்மூருக்குப் புறப்பட்டு வந்ததையும், தம்மனக்குறை தீர்ந்த திருநாவுக்கரசர் திருவாய்மூர் இறைவர் திருவருளையும் செந்தமிழ் உறைப்பின் நின்ற திருஞானசம்பந்தர் சிறப்பையும் இணைத்துப் பாடிப் போற்றியதையும், இவ்வாறு திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தர் இருவரும் திருவாய்மூர் நாதரைப் பாடிப் போற்றியதையும், மீண்டும் இவ்விருவரும் ஒருசேர திருமறைக்காடு எழுந்தருளியதையும் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான் தெளிவுறுத்தி நம்மை இறையருள் அற்புதத்தில் ஆழ்த்துகின்றார்.

''நீடுசீர்த் திருவாய்மூரில் நிலவிய சிவனார் தம்மைப்
பாடுசொற் பதிகந் தன்னாற் பரவிஅப் பதியில்
வைகிக்
கூடுமெய் அன்பு பொங்க இருவருங் கூடி மீண்டும்
தேடுமா மறைகள் கண்டார் திருமறைக் காடு
சேர்ந்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 597)

சண்பை நாடு உடைய பிள்ளையார் ஆகிய நம் திருஞானசம்பந்தர், தமிழ்மொழித் தலைவர் எனும் நம் திருநாவுக்கரசு சுவாமிகளோடு செல்வத் திருமறைக்காட்டுத் திருத்தலத்தில் இவ்வாறு மீளவும் இணைந்து இருந்து சைவசமயத் திருத்தொண்டு ஆற்றி வந்த காலத்தில்தான், தென்னவன் பாண்டி நாட்டில் சைவ நன்னெறிக்குப் பெரும் இடையூறு சமணர்களால் ஏற்கனவே உண்டாகிச் சைவசமயம் நலிவுற்றுத் திகழ்ந்தது.

''மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி'' என்கின்ற பழமொழிக்கு ஏற்ப கூன்பாண்டிய மன்னன் தானும் சமண சமயத்தவனாக மாறிவிட்டபடியால் சைவத் திருக்கோயில்கள் யாவும் வழிபாடின்றி அழியத் தொடங்கிவிட்டன.

கூன் பாண்டியனின் மனைவியார் ஆகிய மங்கையர்க்கரசி தேவியாரும், மதிமிகு அமைச்சர்

குலச்சிறையாரும் அல்லாத பாண்டிநாட்டார் பலரும் அமண்வலையில் அகப்பட்டு நாடெங்கும் சமண இருள் பரவி இருந்தது என்பதை நம் சேக்கிழார் பெருமான்.

''பூழியர் தமிழ்நாட்டு உள்ள
பொருவில் சீர் பதிகள் எல்லாம்
பாழியும் அருகர் மேவும்
பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழிருள் குழுக்கள் போலத்
தொடைமயில் பீலியோடு
மூழிநீர் கையில் பற்றி
அமணரே ஆகி மொய்ப்ப''

(திருஞானசம்பந்தர் புராணம் - 601)

''வரிசிலைத் தென்னவன்தான்
உய்தற்கு வளவர் கோமான்
திரு உயிர்த் தருளும் செல்வப்
பாண்டிமா தேவி யாரும்
குரைகழல் அமைச்ச னாரார்
குலச்சிறை யாரும் என்னும்
இருவர்தம் பாங்கு மன்றிச்
சைவம் அங் கெய்தா தாக''

(திருஞானசம்பந்தர் புராணம் - 603)

என வரும் பாடல்கள் காண்க.

நம் அரும்பெறல் தமிழ்நாடு சமணசமய இருள் பரவி ஒளிமங்கியிருந்த நிலையை நாளும் எண்ணி எண்ணி வருந்தியிருந்தனர் மங்கையர்க்கரசி தேவியாரும், அமைச்சர் குலச்சிறையாரும்.

''கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்தது'' போல பாலறாவாயர் திருமறைக்காட்டிற்கு வந்து எழுந்தருளியிருந்ததைக் கேட்டு மகிழ்ச்சியில் திளைத்து வாயில் காவலர்கள் சிலரிடம் பாண்டிநாட்டு நிலையைப் பாலறாவாயரிடம் தெரிவித்து அவரை உடன் மதுரைக்கு அழைத்து வருமாறு கூறி அனுப்புகின்றனர்.

காடும் நதிகளும் கடந்து, திருமறைக்காடு வந்து சேர்ந்த பாண்டி நாட்டு வாயிற்காவலர்கள் திருஞானசம்பந்தர் திருமடம் வந்து அவரைத் தரிசித்து

''கன்னி நாடு அமணர் தம்மால் கட்டழிந்து
இழிந்து தங்கள்
மன்னனும் அவர்கள் மாயத் தழுந்த மாதேவியாரும்
கொன்னவில் அயில்வேல் வென்றிக்
குலச்சிறையாரும்கூடி
இந்நிலை புகலி வேந்தர்க்கியம்பும் என்று
இறைஞ்சி விட்டார்''

(திருஞானசம்பந்தர், 613)

என்று தாம் தேவியாரும், குலச் சிறையாரும் அனுப்பப்பாண்டிய நாட்டிற்குப் பாலாறாவாயரை அழைத்துப் போக வந்து இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள்.

திருமடத்தில் திருஞானசம்பந்தரை வணங்க வந்த மெய்யடியார்கள் எல்லாம், வாயிற்காவலர் சொன்னதை வழிமொழிந்து

''நன்று நமை ஆளுடைய நாதன் பாதம்
நண்ணாத எண்ணில் அமண் குண்டர் தம்மை
வென்றருளி வேதநூல் நெறியே ஆக்கி
வெண்ணீறு வேந்தனையும் இடுவித்தங்கு
நின்றசெயல் சிவனடியார் செயலே ஆக
நினைந்தருள வேண்டும் என''

(திருஞானசம்பந்தர் புராணம், 614)

கூறிப் போற்றுகிறார்கள்.

''விருப்பப்படி செய்வோம்'' என்று உறுதி கூறும் ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசரோடு திருமறைக்காட்டு இறைவரைச் சென்று வணங்கி வழிபட்டு, திருக்கோயிலுள் வீற்றிருந்து தாம் பாண்டிநாடு செல்ல முடிவு செய்துவிட்டதைக் கூறும்போது திருஞானசம்பந்தர்தம் திருவுள்ளக் கருத்தினை மறுத்துத் திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

''அரசருளிச் செய்கின்றார் ''பிள்ளாய்! அந்த
அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதி இல்லை.
உரைசெய்வது உளதுஉறுகோள் தானும் தீய,
எழுந்தருள உடன்படுவ தொண்ணாது'' என்னப்
''பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால்
பழுதுஅணையாது'' எனப் பகர்ந்து பரமர் செய்
விரைசெய் மலர்த்தாள் போற்றிப் புகலி வேந்தர்
''வேயுறு தோளி''யை எடுத்து விளம்பினாரே''

(திருஞானசம்பந்தர் புராணம், 6167)

இறைவர் அடியார்களுக்கு இந்தநாள் மட்டுமன்று, எந்த நாளும் இனிய நாளே! ''நாளென் செயும், கோள் என் செயும், கொடுங்கூற்று என்செயும்'' என்று திருஞானசம்பந்தர் அஞ்ஞான்று ''பியந்தைக் காந்தாரம்'' பண்ணில் பாடியருளியுள்ள, எஞ்ஞான்றும் அடியார்களுக்கு உற்ற துணையாம் ''கோளறு திருப்பதிகம்'' இரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

சிரபுரத்துப் பிள்ளையார் அருளிச் செய்த ''வேயுறுதோளி'' எனத் தொடங்கும் கோளறு திருப்பதிகம் நம்மை எஞ்ஞான்றும் காக்கும் கவசத் திருப்பதிகம் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

"வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டும் உடனே

ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே'' 1

''என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறு
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 2

''உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வம் ஆன பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 3

''மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆனபலவும்
அதிகுண நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 4

''நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

''வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோள்அரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே'' 6

''செப்பிள முலை நன்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 7

''வேள்பட விழிசெய்து அன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 8

''பலபல வேடம்ஆகும் பரன்நாரிபாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

''கொத்தலர் குழலி யோடு விசயற்குநல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.'' 10

''தேமமர் பொழில் கொள்ஆலை விளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறுகோள்ளும் நாளும் அடி யாரைவந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.''


**திருச்சிற்றம்பலம்**

வையமும் வானும் அடியார்களுக்கு வாரி வழங்கும் இவ்வள்ளல் பதிகத்தை நாளும் ஓதின் வானுலகம் ஆண்டு மகிழலாம் என்பது ''ஆணை நமதென்ற பெருமானின்'' ஆணை ஆகும்.

*(தொடரும்)*

***

# அருளாளர் யார்? எனக் கண்டுபிடியுங்கள்



மாந்தர் மன அழுக்கை வேரறத் துடைக்கும் மகான் ஒருவரின் மணிமொழிகள் சில இங்கு தரப் பட்டுள்ளன. இவற்றைப் பாடியருளியவர் பலரும் அறிந்த அருளாளர்தாம். இவர் யார் எனக் கண்டு பிடியுங்கள். இயலாதவர்கள் பக்கம் 19-இல் விடையைக் கண்டு அறியலாம்.

1. ''பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை
   பிறந்து மண் மேல்
   இறக்கும் பொழுது கொடு போவதில்லை''

2. ''ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
   பேரும் சதமல்ல பெண்டீர் சதமல்ல''

3. ''பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர்
   பூவை யன்னாள்
   தன்னை நினைந்து வெகுவாய் உருகுவர்''

4. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்
   முடிவில் ஒரு
   பிடிசாம்பராய் வெந்து மண்ஆவதுங் கண்டு''

5. ''வினைப் போக மேஒரு தேகங் கண்டாய்
   வினைதான் ஒழிந்தால்
   தினைப்போ தளவுநில்லாது கண்டாய்''

6. ''அத்தமும் வாழ்வும் அகத்து மட்டேவிழி
   அம்பு ஒழுக
   மெத்திய மாதரும் வீதிமட்டே''

7. ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
   உயர்செல்வ மெல்லாம்
   அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்''

8. ''ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
   பாவி என்று நாமம் படையாதே''

9. ''இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி
   நெஞ்சே
   ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே''

10. ''மதன சொரூபன் இவனென மோக
    மங்கையர் கண்டு மருண்டு திரண்டு''

11. ''மாமலை போல் யம தூதர்கள் வந்து
    வலைகொடு வீசி உயிர்கொடு போக''

12. வரிசை கெடாமல் எடுமென ஓடி
    வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
    கடுகி நடந்து சுடலை அடைந்து
    மானிட வாழ்வு என்னவாழ்வென நொந்து
    விறகிடை மூடி அழல்கொடு போட
    வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
    உருகி எலும்பு கருகி அடங்கி
    ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
    நம்பும் அடியேனை இனி ஆளுமே.

★★★

# தேனுக்குள் இன்பம் சிவப்போ? கருப்போ?

- கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

ஊரிலே பலரும் ஒரு சந்யாசியைப் பற்றி விமரிசையாகப் பேசிக்கொண்டனர். அருளாசி மிக்க அவரின் திருவாக்கு பலிப்பதாகவும் - அவரது திருவடி பட்டாலே பாவங்கள் பறந்தோடும் - அவரது பார்வை பட்டாலே கர்ம வினைகள் காத தூரம் ஓடுகின்றன எனவும் பேசினர் - அந்த ஊர் மன்னனுக்கும் செய்தி எட்டியது - அரண்மனைக்கு அவரை வரவேற்று உபசரித்தான்.

ஆனை சேனை அணிதேர்ப்புரவி ஆட் பெரும் படையோடு அரசனாக இருக்கிறாய்? நிறை வான வாழ்க்கை வாழ்கிறாய். ஏது கருதி என்னை வரவழைத்தாய்? எனக் கேட்டார் சந்யாசி.

கப்பம்கட்டும் - சிற்றரசனாக குறுநில மன்னனாக ஆட்சி புரிந்து வருகிறேன் - நாட்டைப் பெரிதாக உருவாக்க வேண்டும். சிற்றரசன் என்பது மாறிப் பேரரசன் என்ற பெயரெடுக்க வேண்டும்!

அப்படியே ஆகட்டும்! அதோடு நின்று விடுமா உனது ஆசை? எனக்கேட்டார் சந்யாசி!

பல நாடுகள் மீதும் போர் தொடுத்து நாட்டை விரிவுபடுத்தி - சக்ரவர்த்தி எனப் பெயரெடுக்க வேண்டும்!

இது மட்டும் தானா? இன்னும் ஏதாவது உண்டா? என வினவினார் - சந்யாசி!

''அதற்குப் பிறகும் ஒரு ஆசை உண்டு - ஆரண்யத்துக்குச் சென்று இறைவனை எண்ணித் தவமியற்ற வேண்டும் - பரமனின் பாதாரவிந்தத்தை யடைந்து பிறவா வரம் பெறவேண்டும். இதுதான் எனது கடைசி ஆசை '' என்றான் மன்னன்.

''கடைசியாகச் செய்ய நினைத்த காரியத்தை இப்போதே செய்யலாமே! அதற்கு என்ன தடை'' எனக் கேட்டார் தவ யோகி!

மன்னன் மனத்தெளிவு பெற்றான். ஞானம் பிறந்தது - கானகம் நோக்கி நடந்தான்.

கதவுகளையெல்லாம் மூடிவைத்துக் கொண்டு காற்றில்லை வெளிச்சமில்லை எனக் கூறுவது மடமை!

ஞானம் பெற வேண்டுமெனில் மனக்கதவு தானே திறக்க வேண்டும்.

உன்னுள்ளே சிவன் ஒளிந்திருக்கின்றான் என்பது திருமூலரின் வாக்கு.

தேனுக்குள் இன்பம் சிவப்போ கருப்போ? வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்! தேனுக் குள்ளே இன்பம் செறிந்திருந்தாற்போல, ஊனுக் குள்ளே ஈசன் ஒளிந்திருந்தானே!

தவயோகிகளைப் பற்றி எத்தனையோ நீதிக் கதைகள்!...

முக்தி நிலை எய்தும் மார்க்கத்தை ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே எய்த முடியும் - என் பதனை, இயற்கை முடிவு செய்திருக்கிறது - மிருகங்கள் - பறவைகள் தாவரங்கள் இவைகளுக்கு அந்த வாய்ப்பில்லை - தவநிலையில் பல ஆண்டுகள் கூட இருக்க முடியும் என்பதை மனிதன் மட்டுமே கைக் கொண்டு வெற்றிபெற்றிருக்கிறான்! இப்படித்தான் ஒரு தவயோகி - பல நூறு ஆண்டுகள் - ஆரண்யத்தில் தவநிலையில் இருந்து தவம் கலைந்து - கண்விழித்தார். பல நூறு ஆண்டுகள் விநாடிகளாக ஓடி மறைந்து விட்டன. அவர் காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இப் போது அந்த ஊரில் யாருமில்லை. ஊரும் மாறிப் போயிருந்தது!

அவர் வாழ்ந்திருந்த முற்காலத்தில் சாதுக்கள் சந்யாசிகள் என்றால் மிகுந்த மரியாதை இருந்தது - காண்போரெல்லாம் கை கூப்பி வணங்குவர். அப்படி ஏதுமே இப்போது நடக்கவில்லை!

காக்கி உடையணிந்த காவலரிருவர் சந்யாசி அருகே வந்தனர்....

வந்தவர்கள் வணங்கவுமில்லை - அவர்கள் வாயிலிருந்து ஏதும் வார்த்தைகளும் வரவில்லை.

***

''உன்னுடைய சொந்த ஊர் எது?'' என ஒரு காவலர் கேட்டார்.

''சாதுக்கு சொந்த ஊரா? அதுவும் என்னைப் போன்ற தவசிகளைப் பற்றி கேட்கவே வேண்டாம்''... என்றார் சந்யாசி.

அன்பாகப் பேசி - அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போனார்கள் காவலர்கள்.

சந்யாசிக்கு எல்லாமே வியப்பாகவும் வேடிக்கையாகவுமிருந்தது.,

சற்று நேரத்துக்கெல்லாம் - போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கே வந்தார் - நல்லவர்களையே அவர் பார்த்ததில்லை போலிருக்கிறது - நாகரீகம் ஏதும் அறியாதவர் என்பது அவரது நடவடிக்கையில் தெரிந்தது.

உங்கள் தோற்றத்துக்கும் - செய்கைக்கும் சம்பந்தமே இல்லை. மொத்தத்தில் நீ ஒரு கள்ளக் கூடத்தல் ஆசாமி! உனது உடமைகளை எங்கே வைத்திருக்கிறாய்?... உம்.... சொல்! என மிரட்டினார், ''உடமைகளா?... அப்படி ஏதுமில்லை'' என்றார், சந்யாசி! சாதுக்கள் வேடத்தில் போதைப்பொருள் கடத்துகிறார்கள் என்ற செய்தியை அன்றைய பத்திரிகையில் படித்துக் காட்டினார் இன்ஸ்பெக்டர்.

சந்யாசி தனது பூர்வ சரித்திரத்தை விளக்கினார் - அவைகள் எதையும் நம்பத்தயாராக இல்லை இன்ஸ்பெக்டர், கேட்பாரற்றுக் கிடந்த போதைப் பொருளைக் காட்டி ''இவைகளை நீர்தான் கடத்தினீர்'' என்று குற்றம் சுமத்தி ஒரு வாக்கு மூலம் எழுதி சந்யாசியின் இடது கை பெருவிரல் ரேகையை அதில் பதிவு செய்து முடித்து - இந்த ஆசாமியை லாக்கப்பில் போடுங்கள் என தலைமைக் காவலருக்கு உத்தர விட்டார். தேவையற்ற விஷயம் - முடிவில் நீங்கள் ஏமாந்து விடுவீர்கள் என்றார் சந்யாசி. அவரது பேச்சை அலட்சியப்படுத்தி லாக்கப்பில் அடைத்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

பத்திரிகைக் காரர்களை வரவழைத்து செய்தியும் கொடுத்தார். பூட்டிய லாக்கப் அறையிலிருந்து மாயமாய் மறைந்தார் சந்யாசி. பிடிபட்ட சந்யாசி தப்பித்து விட்டார் என்ற செய்தி தனது பதவிக்கு பாதிப்பை உண்டாக்கிவிடும் என அஞ்சிய போலீஸ் இன்ஸ்பெக்டர். இவரைப் போல அடையாளம் உள்ள வேறொரு சாதுவைப்பிடித்து வந்து - கோர்ட்டிலே ஒப்படைத்தார். விசாரணைக் கூண்டிலே கண்கலங்கினார் புதிய சாது.

இந்த சாதுவின் கண்களுக்கு மட்டும் தெரியும் வண்ணம் பழைய சந்யாசி தோன்றி ''அஞ்ச வேண்டாம். குற்றப் பத்திரிக்கையிலிருப்பது எனது கை ரேகை - உம்முடையது இல்லை. துணிச்சலாக இதை நீர் வெளியிடலாம்'' என்றார் - ரகசியமாக.

இந்த உண்மையை நீதிபதி அறிந்ததும், புதிய சாதுவை விடுதலை செய்துவிட்டார்...

காவல் துறையினர் திணறிப் போயினர்.

அந்தக் காலத்திலேயே - தவம் செய்ய காடு களைத்தான் தேர்ந்தெடுத்தனர் - நாடு கெட்டுப் போய் நாட்கள் பல ஆகிவிட்டன.

வாரும் என்னுடன் என்று கூறி சாதுவை ஆரண்யத்துக்கு அழைத்துப் போய் - நெடுங்காலம் தவமிருக்கும் வழிமுறைகளைக் கற்றுக் கொடுத்தார் - சந்யாசி!

காடும் கெட்டுப் போனால்
எங்கே போவது?

***

## எழுவகைப் பிறப்புகள்

1. தேவர் - பதினோரு லட்ச பேதம்
2. மனிதர் - ஒன்பது லட்ச பேதம்
3. விலங்கு - பத்து லட்ச பேதம்
4. பறவை - பத்து லட்ச பேதம்
5. ஊர்வன - பதினைந்து லட்ச பேதம்
6. நீர்வாழ்வன - பத்து லட்ச பேதம்
7. தாவரம் - பத்தொன்பது லட்ச பேதம்

உயிர்கள் ஆக எண்பத்து நான்கு லட்ச யோனி பேதங்கள் கொண்டன.

# நிலா வழிபாடு

- டாக்டர் டி. செல்வராஜ்

**சூரியனும் சந்திரனும்**

சூரிய வழிபாடும் சந்திரவழிபாடும் காலத்தைத் துல்லியமாகக் கணித்துக் கூற முடியாத பழமை வாய்ந்தவை. சூரிய வழிபாடு தோன்றிய போதே ச்ந்திர வழிபாடும் தோன்றியிருக்க வேண்டும்.

மிகப்பழங்கால மக்கள் பகலில் ஒளியும், சூடும் தந்த சூரியனை அச்சத்துடனும், இரவில் ஒளியும், குளிர்ச்சியும் தந்த சந்திரனை அன்புடனும் வழிபட்டனர். பல சூழ்நிலைகளில் இருவரையும் நிகராகப் போற்றினர்.

1. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் ஞாயிற்றையும், திங்களையும் போற்றினார்.

2. இறைவன் உயிர்; அவனுக்கு எட்டு உடம்புகள் உள்ளன. இவற்றுள் சூரியனும், சந்திரனும் இரண்டு; ஐம்பெரும் பூதங்களும், உயிரும் மற்ற ஆறு உடம்புகள் ஆகும்.

3. இறைவனது வலக்கண்ணைச் சூரியன் என்றும், இடக்கண்ணைச் சந்திரன் என்றும் மதித்தனர்.

4. நாராயணனின் வலத்திருக்கையில் ஏந்திய திருச்சக்கரத்தைச் சூரியன் என்றும், இடத்திருக்கையில் ஏந்திய திருச்சங்கைச் சந்திரன் என்றும் இளங்கோவடிகள் முதலானோர் வருணித்தனர்.

   நாராயணனின் உந்தியில் ஓங்கிய தாமரை, திருச்சக்கரத்தைக்கண்டு சூரியன் என்று மலருமாம்; திருச்சங்கைக் கண்டு சந்திரன் என்று கூம்புமாம். இவ்வாறே அத்தாமரை மீண்டும் மலரும்; கூம்பும்; ஒரு நிலைப்படாது என்றருளினார் பேயாழ்வார். (மூன்றாம் திருவந்தாதி 67)

5. காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் தனித்தனி கோயில்கள் இருந்தன என்பதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. (கனாத்திறமுரைத்த காதை 11, 13) ஆனால் அவற்றில் எத்தகைய தெய்வ ஓவியங்கள் அல்லது திருமேனிகள் இருந்தன என்பது தெரியவில்லை.

6. மேலும், காவிரிப்பூம்பட்டினத்தில் சோம குண்டம், சூரிய குண்டம் என்ற பெயர்களுடன் இரு தடாகங்கள் இருந்தன என்பதையும் சிலப்பதிகாரத்தால் அறிய முடிகிறது. (காதை 9: அடி 59), இவற்றில் மூழ்கி இறைவனைத் தொழுகின்றவர்கள் இம்மையிலும், மறுமையிலும் பற்பல இன்பங்களை அனுபவிப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது. இந்த இரு தீர்த்தங்களை ''இருகாமத்து இணையேரி'' என்று பட்டினப் பாலையும் குறித்தது (அடி 39)

   சோம குண்டமும், சூரிய குண்டமும் என்ற இவை திருவெண்காட்டில் இப்போதும் இருக்கின்ற சோம தீர்த்தமும், சூரிய தீர்த்தமும் ஆகும் என்று சான்றோர் கருதுகின்றனர்.

7. கோயில்களில் முதல் வழிபாடுகள், காலையில் சூரியனுக்கும், மாலையில் சந்திரனுக்கும் உரியன.

8. திருவிழாக்காலங்களில், குறிப்பிட்ட ஒரு நாளில், இறைவன் காலையில் சூரிய பிரபையிலும், மாலையில் சந்திர பிரபையிலும் பவனியுலா வருகின்றார்.

9. கல்வெட்டுகள், பத்திரங்கள் முதலியவற்றில் அறச் செயல்களை நிலைநாட்டி எழுதுகின்ற போது அவை ''சந்திர சூரியர் உள்ளவரை நிலைபெற்று விளங்க வேண்டும்'' என்று எழுதுகின்ற ஒரு மரபு உண்டு.

10 சோழர் சூரிய வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்றும், பாண்டியர் சந்திர வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்றும் தம்மைத்தாமே குறித்துக் கொள்வதில் பெருமையடைந்தனர்.

மேற்கண்டவற்றால் மக்கள் சூரியனையும், சந்திரனையும் நிகராகப் போற்றினர் என்பது தெளிவாகிறது. இவை போன்ற குறிப்புகள் இன்னும் பல இருக்கின்றன.

**மூன்று வகை வழிபாடுகள்**

நிலாவைப் பக்தர்கள் மூன்று வகைகளில் வழிபடுகின்றனர் எனலாம்.

1) பிறை நிலா வழிபாடு

2) நிறை நிலா வழிபாடு

3) சந்திர வழிபாடு.

இவற்றுள் முதல் இரண்டும் நிலாவைக் கிரக நிலையில் நேரில் தரிசித்து வழிபடுகின்ற முறைகளாம்.

நிலா என்ற கிரகத்தின் நாயகன் சந்திரன். இவனைச் சிலை நிலையில் வழிபடுவது சந்திர வழிபாடு.

*1) பிறை நிலா வழிபாடு*

அமாவாசைக்குப் பிறகு இரண்டாம் நாள் பிறை கண்ணுக்குப் புலனாகாது. நான்காம் நாள் பிறையில் களங்கம் தோன்றத் தொடங்குவதால் அதைத் தரிசிப்பது குற்றம். எனவே, மூன்றாம் பிறையே தரிசிக்கத்தக்கது; புனிதமானது. இதனைப்பக்தர் வழிபடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

1. அமாவாசைக்குப் பிறகு மூன்றாம் பிறையே முதன் முதல் திருக்காட்சி தருகிறது.

2. அந்தி மாலையில் மேற்கில் ''பிறப்பது'' பிறை. இது உடனே கண்ணுக்குப் புலப்படாது. தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

3. மூன்றாம் பிறை மிகவும் தூய்மையானது; களங்கம் சிறிதும் இல்லாதது.

4. சிவன், விநாயகன், பெண் தெய்வங்கள் சிலர் மூன்றாம் பிறையைச் சூடி இருப்பதால் பிறையை வழிபடுவது மிகவும் நல்லது.

5. பிறையின் வண்ணமும், வடிவமும் மிகவும் கவர்ச்சியானவை. இது தரிசனம் தந்த சிறிது நேரத்தில் மறைந்துவிடும். இது தோன்றி மறைகின்ற சிறிது நேரத்தில் இதைத்தரிசனம் செய்ச' வழிபட வேண்டும்.

எண்பது வயது கடந்த பெரியவர்களை ''ஆயிரம் பிறை கண்டவர்'' என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். இந்த வாழ்த்து பிறையைத் தரிசித்தால் ஆயுள் நீளும் என்ற குறிப்புடையதாம்.

## வளர்பிறை - தேய்பிறை

நிலா பதினாறு கலைகளைக் கொண்டது. இவை ஒவ்வொன்றாக வளர்ந்து நிரம்புவது பௌர்ணமி; தேய்ந்து குறைவது அமாவாசை. இந்த வளர்ச்சி, தேய்வுகளைத் 'திதிகள்' என்பர்.

திதிகளையும், நட்சத்திரங்களையும் நிலைக்களனாகக் கொண்டு பக்தர்கள் பல விரதங்களை மேற்கொள்கின்றனர்; பல திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

திருவாளர் ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள், அபிதான சிந்தாமணியில் (பக்கங்கள் 1451 - 1464) மொத்தம் இருநாற்றுப் பதினேழு விரதங்களைத் தொகுத்துரைத்தார். இவை பற்பல தெய்வ வழிபாட்டுக்க உரியன. அவரவர் விரும்பிய தெய்வங்களைத் தியானித்து, விரதங்காத்து, வழிபட்டுப் பற்பல நற்பலன்களைப் பெற முடியும்.

திதிகளும், தேர்ந்தெடுத்த சில விரத வழிபாடுகளும், வழிபாட்டுக்குரிய தெய்வங்களும் வருமாறு:-

| மாதம் | பிறை | திதி | வழிபாடு தெய்வம் |
|---|---|---|---|
| 1. புரட்டாசி | வளர்பிறை | பிரதமை | நவராத்திரி தொடக்கம். சக்திகள் |
| 2. கார்த்திகை | வளர் பிறை | திவிதியை | எமன் |
| 3. மாதந்தோறும் | வளர்பிறை | திருதியை | மூன்றாம் பிறை |
| 4. மாதந்தோறும் | இரு பிறை | சதுர்த்தி | விநாயகர் |
| 5. ஆவணி | வளர் பிறை | பஞ்சமி | நாகம் |
| 6. மாதந்தோறும் | வளர் பிறை | சஷ்டி | முருகன் |
| 7. தை | வளர் பிறை | சப்தமி | ரதசப்தமி சூரியன் |
| 8. ஆவணி | தேய்பிறை | அஷ்டமி | கிருஷ்ணன் |
| 9. பங்குனி | வளர் பிறை | நவமி | இராமன் |
| 10. புரட்டாசி | வளர் பிறை | தசமி | நவராத்திரி நிறைவு விசய தசமி. சக்திகள் |
| 11. மார்கழி | தேய் பிறை | ஏகாதசி | வைகுண்ட ஏகாதசி நாராயணன் |
| 12. வைகாசி | வளர்பிறை | துவாதசி | நாராயணன் |
| 13. மாதந்தோறும் | இரு பிறை | திரியோதசி | பிரதோஷம் சிவன் |
| 14. மாசி | தேய்பிறை | சதுர்த்தசி | மகாசிவ ராத்திரி சிவன் |
| | அமாவாசை | பிதிரர் வழிபாடு | |
| | பௌர்ணமி | பல தெய்வ வழிபாடு. | |



மூன்றாம் பிறை நிலாவை நேரில் தரிசித்து வழிபடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் நிலாவின் கலைகள் வளர்கின்ற அல்லது தேய்கின்ற திதிகளில் பல தெய்வங்களைத் தியானித்து விரதமிருந்து போற்றுகின்றனர் என்பது நன்கு புலனாகின்றது. தெய்வங்கள் பலர்; விரதங்கள் பல. வழிபடு தெய்வங்களையும், காக்க வேண்டிய விரதங்களையும் பக்தர்களே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

### (2) நிறை நிலா வழிபாடு

தமிழில், நிலாவுக்குப்பல பெயர்கள் வழங்குகின்றன. தேர்ந்த சில வருமாறு :-

1. அம்புலி 2 அமுதகிரணன் (3) இந்து (4) இராக்கதிர் (5) களங்கன் (6) குமுத சகாயன் (7) சசி (8) சோமன் (9) தண்சுடர்க்கலையோன் (10) திங்கள் (11) நிலா (12) பிறை (13) மதி. (14) சந்திரன்

திங்கள் : பழங்காலத்தில் நிலாவின் இயக்கத்தைக் கருத்திற்கொண்டு மாதங்கள் கணக்கிடப்பட்டன. எனவே, நிலாவுக்கும் மாதத்திற்கும் ''திங்கள்'' என்ற பொதுப்பெயர் அமைந்தது. வாரத்தில் திங்கட் கிழமை நிலாவுக்குரிய நாளாம்.

மதி : சந்திரன் அறிவின் தெய்வம். அறிவு வளர்வதும், தேய்வதும், குழம்புவதும் சந்திரனால் நிகழ்கின்றன என்பர். எனவே, சந்திரனுக்கும், அறிவுக்கும் ''மதி'' என்ற ஒரே பெயர் நிலைத்தது.

ஆங்கிலத்திலும், சந்திரனை Lunar என்றும், அறிவு குழம்பிய பைத்தியத்தை Lunatic என்றும் வழங்குகின்றனர். இவை இரு சொற்களும் தொடர்புடையன. சந்திரனுக்கும், அறிவுக்கும் தொடர்பு உண்டு என்பது இதனாலும் தெரிகின்றது.

### அமாவாசையும் பௌர்ணமியும்

பழங்காலத்தில் அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரு நாள்களையும் உவா அல்லது உவவு நாள்கள் என வழங்கினர்.

#### பழைய பெயர்கள்

| | | |
|---|---|---|
| 1. அமாவாசை | - | இருள் உவா |
| 2. வளர்பிறை | - | அலர்தரு பக்கம் (வளரும் பக்கம்) |
| 3. பௌர்ணமி | - | ஒளி உவா; பெரும்பக்கம்; பெருநாள், மதிநிறைந்த நன்னாள். |
| 4. பௌர்ணமி நிலா | - | 1 கோடு கூடு மதியம் (பிறை நிலாவின் இருபக்கமும் இருந்த இருமுனைகளும் |

கூடி நிரம்பிய முழு மதியம்) 2) அகல் மதி (3) பால்மதி.

5. தேய்பிறை - வழியது பக்கம். (தேயும் பக்கம்)

உவா, உவவு என்றால் உவப்பு, மகிழ்ச்சி என்பன பொருள்களாம். உவா நாள்களில் மக்கள் எந்தப்பணிக்கும் போகமாட்டார்கள். குடும்பத்தின ரோடு மிக்க மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். அப் போது வழிபாடுகளைச் சிறப்பாக நிறைவேற்று வார்கள்.

பிதிரர்களை வழிபட அமாவாசை ஏற்றது என்றும், தெய்வங்களை வழிபடப் பௌர்ணமி உகந்தது என்றும் முன்னோர் மிகப்பொருத்தமாக விதித்தனர். இந்த விதிகள் நாளது வரையில் நெகிழ வில்லை.

## நிறை நிலா வழிபாடு

மூன்றாம் பிறை நிலாவை வழிபடுகின்றவர் மிக மிகப்பலர்; ஆனால் நிறை நிலாவை வழிபடு கின்றவர் மிக மிகச்சிலரேயாவர்.

பக்தர் காலையில் ''சூரிய நமஸ்காரம்'' செய் கின்றனர். மாலையில் ''சந்திர நமஸ்காரம்'' என்ற வழிபாட்டுமுறை இல்லை.

நாட்டுப்புற மக்கள் நிறைநிலா நாளன்று முற்றத்தில் உணவு வகைகளைச் செய்து, நிலாவுக்குப் படைத்து, வழிபட்டு, உண்டு களித்தனர். நகரத்தினர் 'நிலாச் சோற்றை' உண்டுண்டு மகிழ்கின்றனர்; நிலா வழிபாடு நிகழ்வதாகத் தெரியவில்லை.

நிறைநிலாவைப் பலர் வழிபடாததற்கு அதன் கண் அமைந்த களங்கமும் ஒரு காரணமாம்.

**களங்கம்** : நிலாவின் களங்கம் குற்றமன்று; குணமே. உண்மையில், அக்களங்கம் அதற்குக் கூடுத லான அழகைத் தருகின்றது.

களங்கத்தைப்பலர் பலவாறு புனைந்துரைக் கின்றனர். சில வருமாறு :

நிலாவில் ''பாட்டி வடை சுடுகின்றாள்'' என்பது குழந்தைகளின் கற்பனை.

களங்கம் ''முயற்களங்கம்'' என்பது புலவர் களின் கற்பனை.

நிலாவுக்கு ''க்ஷயரோகம் பிடித்து விட்டது'' என்று இகழ்வது ஒரு கற்பனை.

நிலாவில் அமுதம் உண்டு. அதை அள்ளி எடுத்த பிரமன் தமயந்தியை வடித்தான். அமுதம் அள்ளப்பட்ட பள்ளமே களங்கம் என்பது மற்றொரு கற்பனை.

இவ்வாறே களங்கத்தைப்பற்றிய கற்பனைப் புனைவுகள் ஓராயிரம் உண்டு.

நாராயணன் மேலான பரம்பொருள் ஆவான். அவன் மிகப்பிரகாசமானவன்; குற்றமற்றவன். ஆகவே, அவனைச் ''சூரிய நாராயணன்'' என்பர். இப்பெயர் சூரியனையும், நாராயணனையும் குறிக்கிறது.

இராமன் வாலியை மறைந்திருந்து தாக்கினான் என்ற குற்றத்தைச் சிலர் களங்கமாகக் கற்பித்துக் கூறுகின்றனர். குணத்தில் களங்கமுடைய அவ னுக்குச் ''சூரிய ராமன்'' என்றோ ''இராம சூரியன்'' என்றோ பெயர்கள் இல்லை. 'இராமச்சந்திரன்' என்ற பெயர் பொருத்தமாக இருக்கிறது. இருவரும் களங்க முடையவர்.

**நிறை நிலா** : நிறை நிலா நாள்களில் எல்லாக் கோயில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறு கின்றன. திருவிழாக்கள் தொடங்குகின்றன.

ஆண்டுதோறும், நிறைநிலா நாள்களில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற மிக முக்கியமான வழிபாடு கள் சில வருமாறு:-

| | மாதம் | நட்சத்திரம் | வழிபடு தெய்வம் |
|---|---|---|---|
| 1. | சித்திரை | சித்திரை | சித்திரா புத்திரன் |
| 2. | வைகாசி | விசாகம் | முருகன் |
| 3. | ஆடி | பூரம் | அம்மன் |
| 4. | கார்த்திகை | கிருத்திகை | முருகன் |
| 5. | மார்கழி | திருவாதிரை | நடராசர் |
| 6. | தை | பூசம் | இராமலிங்க சுவாமிகள் |
| 7. | மாசி | மகம் | முருகன் |
| 8. | பங்குனி | உத்திரம் | முருகன் |

நட்சத்திரங்களுடன் நிறைநிலா பொருந்து கின்ற நாள்கள் சில போது மாறுவதுண்டு.

## 3. சந்திரன் வழிபாடு

நிலாவைச் சிலை வடிவத்தில் வழிபடுவது சந்திரன் வழிபாடு. நவக்கிரக நாயகர்களில் சந்திரன் ஒருவன்.

நவக்கிரகங்களில் சந்திரன், வைதிகப் பிரதிட்டையில் சூரியனுக்குத் தென்கிழக்கிலும், ஆகமப்பிரதிட்டையில் சூரியனுக்குக் கிழக்கிலும் எழுந்தருளித் தண்ணருள் பொழிகின்றான்.

திருமேனி : சந்திரன் மேற்கு நோக்கி, நின்ற கோலத்தில் இரு கைகளில் இரு குமுதங்களை ஏந்திக் காட்சி தருகின்றார். திருமுடிக்குப்பின்னால் பிறை வட்டம் இருப்பது பெரும்பான்மையாம். சூரியனார் கோயிலில் முழு நிலாவட்டம் இருப்பது ஒரு சிறப் பியல்பு.

பிரகாரத்தின் தொடக்கத்தில் சூரியனையும், முடிவில் சந்திரனையும் பிரதிட்டை செய்வது ஒரு மரபாக இருந்தது. வலம்வருகின்ற போது முதலில் சூரியனையும், முடிவில் சந்திரனையும் வழிபட வேண்டும்.

**சந்திரனுக்குரியன**

| | | |
|---|---|---|
| 1. வணங்கும் தேவதை | - | பார்வதி |
| 2. மனைவியர் | - | கார்த்திகை; ரோகிணி |
| 3. ஆடையின் நிறம் | - | வெள்ளை |
| 4. வாகனம் | - | முத்துவிமானம் |
| 5. மலர் | - | வெள்ளை அலரி |
| 6. சமித்து | - | முருக்கு |
| 7. தானியம் | - | பச்சரிசி |
| 8. உணவு | - | நெய்பாயசம் |
| 9. உலோகம் | - | ஈயம் |
| 10. நவரத்தினம் | - | முத்து. |

திங்களூர் : சந்திரன் சிவனை வழிபட்ட திருத்தலம் திங்களூர். இது திருவையாற்றுக்குக் கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

திருநாவுக்கரசரைத்தம் தெய்வமாகப் போற்றிய அப்பூதி அடிகளார் அவதரித்த திருத்தலம் இது. அப்பூதி அடிகளாரின் மூத்த மகன் பாம்பு தீண்டி மடிந்தான். திருநாவுக்கரசர் தல இறைவனின் மீது ''ஒன்று கொலாம்'' என்ற மந்திரத்திருப்பதிகத்தைப் பாடி அவனை உயிர்ப்பித்தார். திருநாவுக்கரசர் பெயரில் அப்பூதி அடிகளார் அமைத்த தண்ணீர்ப்பந்தல் இப் போதும் செயற்படுகிறது.

## அருளாளர் இவர்தாம்

''காதற்ற ஊசியும் வாராது காண்
கடைவழிக்கே''

என்பதை அவனிக்கு உரைத்து திருவொற்றியூரில் கடற்கரையில் சிவ லிங்கம் ஆகிய பட்டினத்தடிகளே

பக்கம் 12-இல் காணும் மணிமொழி களை அருளியுள்ள அருளாளர் ஆவார்.

திங்களூர், சந்திர தோஷப் பரிகாரத்திருத் தலமாம்.

இருபூசைகள் : திங்களூரில், ஆண்டு தோறும், பங்குனி உத்திரத்தன்று, காலையில் இறைவனின் மீது சூரிய ஒளி படர்கின்ற சூரியபூசையும், மறுநாள், பௌர்ணமியன்று, மாலையில், சந்திர ஒளி படி கின்ற சந்திரபூசையும் நடைபெறுகின்றன. இவ்வாறு ஒரு தலத்தில் அடுத்தடுத்து இரு பூசைகள் நடை பெறுவது மிகவும் அதிசயமாம்; அபூர்வமாம்; தெய்வீகமாம்.

**இலக்கியங்களில் நிலா**

காப்பியங்களில் நிலாவின் தோற்றத்தையும், மறைவையும் வருணிக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது.

பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்த வகையின் அம்புலிப்பருவத்தில் நிலாவைப்பற்றிய பற்பல கற்பனைப்புனைவுகளை மிகுதியாகக்காண முடியும்.

நிலாவைப்பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் பலவாகும். ஒரு பாடல் நட்சத்திரங்களின் நடுவே நாயகனாக வீற்றிருக்கின்ற நிறைநிலாவை,

''சோளப்பொரி நடுவினிலே
சுட்டுவைத்த தோசை''

என்று வருணிக்கின்றது. சுவையான கற்பனை.

***

# ஒளிந்திருக்கும் ''நான்'' யாரோ?

- கவிஞர் சொ. பொ. சொக்கலிங்கம்

உடலோடு உயிர்சேர்ந்த உருவமொன்றே ''நான்'' என்றால்
உடலுக்குள், உயிருக்குள் ஒளிந்திருக்கும் ''நான்'' யாரோ?
படம் பார்க்கும் கண்களுக்குப் பார்வை இல்லை கண்டுகொள்ள,
பார்வைக்கும் எட்டாமல் படர்ந்துவரும் உணர்வே, ''நான்''.
அடம்பிடிக்கும் மனத்தாலும், அகண்டபெரும் அறிவாலும்,
அறிந்துகொள்ள இயலாத அந்தரங்க உணர்வே ''நான்''.
சுடர்காட்டும் விண்மீன்கள், சுடர்காட்டி மறைவதுபோல்,
சுடர்காட்டி மறைந்துவிடும் சொல்லரிய உணர்வே ''நான்''. (1)

''நான்'' என்றால் புறஉருவை நலுங்காமல் அறிந்திடுவோர்,
''நான்'' என்ற அகஉருவை நம்புவதே இல்லை, ஏனோ?
ஊன்உயிரும் இரண்டேபோல்; உடல்உயிரில் ''நான்'' இரண்டே,
உருவோடு ''நான்'' ஒன்று, உருவமில்லா ''நான்'' இரண்டு,
ஆணில்பெண், பெண்ணில்ஆண், அன்பேசிவம், அர்த்தநாரி,
ஆனபெரும் உண்மைகளும் அடிப்படையில் ஒன்றுதானோ?
காண்பதெலாம் இரண்டொன்றாய் காட்சிதரும் மர்மம்இதோ?
கண்டறிந்தால் ''நான்'' பேசக் காதிரண்டும் கேட்டிடுமே! (2)

ஐம்புலனின் ஆட்சிக்கு அடிமையாகா ஒன்றே ''நான்''.
ஐம்புலனுக் கெட்டாமல் ஆட்சிசெய்யும் அரசன் ''நான்''.
ஐம்புலனால் உணர்ந்தாலும், அடையாளம் இல்லா ''நான்'',
அடுக்கிவரும் ஆசைக்கு அடிபணியா ஒன்றும் ''நான்''.
பொங்கிவரும் உணர்வுகளின் பொய்யான புறஉருவால்
புரியாத அகஉருவின் புகலிடத்தின் பொற்கதிர் ''நான்''.
தங்குமிடம் மனிதருடல், தரணியிலே ஏன்அறியார்?
தவறுகளால் தாழாமல் தடுத்தேதான் உயர்த்தும் ''நான்''. (3)

ஊன்ஒடுக்கி, ஓங்கார ஒரு நிலையில் தியானித்தால்,
ஓங்கார உருவத்தான், உயர்அப்பன் அருள்சுரக்க,
''நான்'' அறியச் செய்திடுவான், நலம்பலவும் தந்திடுவான்,
நம்பினோரைக் கைவிடாமல் நலம்காத்துச் சுகம்தருவான்,
''நான்'' அறிந்தால் நலமளிக்கும், நஞ்சுண்டான்கண்டிடலாம்,
நாடியெல்லாம் ஓங்கார, நாதமழை கேட்டிடலாம்.
''நான்'' பேசக் கேட்டபடி நடந்துவிடில் நானிலத்தில்,
நலம்பெருகி மானுடர்தம் நல்வாழ்வு மலர்ந்திடுமே. (4)

***

# பூசலாரும் திருநின்றவூரும்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

முழுமுதற் கடவுளான சிவன்பால் செயற்கரிய தொண்டுகளைச் செய்த 63 நாயன்மார்களின் சிறப்பினைக் குறித்துக் கூறுவது பெரிய புராணம். இதனைச் சேக்கிழார் இயற்றினார்.

கதை என்றால் புராணம், மாக்கதை எனச் சேக்கிழாரே குறிப்பிட்டுள்ளதால், இது பெரிய புராணம். மிகவும் எளிமையாக வாழ்ந்த அடியார்களின் வரலாறுகள்தான் இந்தப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன. அதனால் மாக்கதை என்று சேக்கிழார், விநாயகர் துதியில் பாடியுள்ளார்.

தமிழில் சைவப்பெருமக்களுக்கு, இறைவனும், மண்ணுயிர்களும் கைகோர்த்து நடமாடிய இலக்கியங்கள் இரண்டு. ஒன்று, திருவிளையாடல் புராணம் - மற்றது, பெரியபுராணம், முன்னது, மண்ணுயிர்பால் கொண்ட கருணையால், இறைவன் தாமே விண்ணுலகுவிட்டு மண்ணுலகுக்கு இறங்கிவந்து அருள் பாலித்த வரலாறு, பின்னது, மானுடர்களின் செயற்கரிய தொண்டுகளே, விண்ணிலிருந்து இறைவனை பூலோகத்துக்கு ஈர்த்துவந்த வரலாறு.

## இறைவரோ தொண்டர் உள்ளத்தொடுக்கம்

''தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' எனும் மூத்தோர் வாக்கினுக்கேற்ப, அடியார்களின் சிறப்பைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதால், இதனை பெரிய கதை அல்லது மாக்கதை என்பர். இராம பிரானையே மூலப்பொருளாக வைத்து, கம்பர், ராமாயணம் இயற்றியதால், இவரை கவிச்சக்கரவர்த்தி என்றே புகழலாயினர். மாறாக, அடியார்களின் பெருமையை சிறப்பெனக்கருதி, திருத்தொண்டர் புராணம் இயற்றியதால், இவரை தெய்வச்சேக்கிழார் என அழைக்கலாயினர்.

இறைவன்பால் செயற்கரிய தொண்டினைச் செய்த அடியார்களின் முயற்சிக்கு வாழ்த்து கூறவே, இறைவன் மண்ணுலகுக்கு வந்ததாக சேக்கிழார் இனம் காட்டுகிறார். இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்கள் சமஸ்கிருதத்தில் இருந்ததைத் தழவித் தமிழில் எழுதப்பட்டது. தமிழில் இயற்றப்பட்ட பெரிய புராணம் ஒன்றுதான் சமஸ்கிருதத்தில் உபமன்யு முனிவரால் இயற்றப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பெரியபுராணத்தின் சிறப்பை அறியமுடிகிறது.

தொண்டை நன்னாட்டில் உள்ள தலங்களுள் ஒன்றாகத்திகழ்வது திருநின்றவூர் எனும் தலம், இத் தலத்தில் மறையவர் குலத்திலே, பூசலார் என்னும் சிவனடியார் தோன்றினார். பெற்றோர்கள் வைத்த பெயர் பின்னாளில் மறைந்துவிட்டது. சதாகாலமும் மேனிமுழுவதும் திருநீறு பூசிக்கொள்வது இவரது வழக்கம். அதனால் இவரை மக்கள் பூசலார் என்றே அழைக்கலாயினர். இவர் பரம ஏழை. வயதினாலும் முதிர்ந்தவர். எனினும், தான் தோன்றிய இத்தலத்தில் இறைவனுக்கு ஓர் ஆலயம் கட்ட மனம் உந்திற்று. பொருளுதவிக்கு யாரும் முன்வரவில்லை.

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போல் ஆகிவிடுமோ என முதலில் அச்சமுற்றார். பொருளாலும், உடல் உழைப்பினாலும் கட்ட முடியாத ஆலயத்தை, மனத்திலேயே கட்டுவதென முடிவு எடுத்தார். நல்ல நாள் பார்த்து, இருப்பை மரத்தடியில் அமர்ந்து ''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' எனும் மணிவாசகரது கருத்துக்கேற்ப சித்தத்தை சிவன்பால் வைத்து, உள்ளத்தினுள்ளே, இரவு பகலென பாராது பணியைத் துவங்கி விட்டார்.

அது சமயம் கி.பி. 7-ம் நூற்றாண்டில் காஞ்சியில் இராஜசிம்மன் எனும் பல்லவன் ஆண்டுவந்தான். மன்னனும் காஞ்சியில், கைலாஸநாதருக்கு ஓர் ஆலயம் கட்டவிரும்பினான். ''அரசன் அன்றே சாதிப்பான, தெய்வம் நின்றே சாதிக்கும்'' எனும் மூதுரைக்கேற்ப, அரசனே ஆலயம் நிறுவமுற்பட்டதும் குடிமக்களும் இத்திருப்பணிக்கு பூரண ஒத்துழைப்பை நல்கினர்.

பூசலார் மனத்தினாலேயே ஆலயம் கட்டி எல்லாப் பணிகளையும் பூர்த்தி செய்தார். அதாவது கோபுரமும், விமானமும் அமைத்துத் திருக்குளமும் ஏற்படுத்தினார். இறைவனை பிரதிஷ்டை செய்ய நாளும் குறித்து விட்டார்.

இராஜ சிம்மனும், அதே சமயம், 'தாம் நிர்மாணித்த கைலாஸ நாதர் ஆலயத்தைப் பூர்த்தி செய்து, பிரதிஷ்டைக்கு அதே நாளை குறித்துவிட்டார்.

விழாவினுக்கு முந்தின நாள் இறைவன் நடு நிசியில் அரசனின் கனவில் தோன்றி, ''அன்பனே, உன்னுடைய கோயிலில் நாளையதினம் பிரதிஷ்டை செய்வதை, வேறோர் தினத்துக்குமாற்றி வைத்துக் கொள். திருநின்றவூரில், பூசலார் எனும் எமது அன்பன் பல நாட்களாக உழைத்துக் கட்டிய ஆலய பிரதிஷ்டைக்கு நாளைய தினம் செல்ல வேண்டி யுள்ளது.'' என அசரீரியாக ஒலித்தார்.

அரசன் ஒன்றும் புரியாது, துயிலினின்றும் துடித்தெழுந்து அரசியாரோடு, பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு திருநின்றவூர் சென்றார். அங் குள்ளோரிடம், புதிதாக கட்டியுள்ள ஆலயம் பற்றி விசாரித்தார். அது போன்று ஆலயம் இங்கு யாரும் கட்டியதாகத் தெரியவில்லை. எதற்கும், அதோ! அங்கே தியானத்தில் இருக்கும் முதியவரை கேட்டுப் பாருங்கள் என ஊர்மக்கள் கூறினர்.

அரசனும், அம்முதியவரை அணுகி, ''சுவாமி இங்கே பெரிய ஆலயம் ஒன்று இங்கே கட்டப்பட்டு, பிரதிஷ்டையும் இன்று நடக்கப்போவதாக கேள்விப் பட்டேன்'' என வினவினான்: ''எல்லாம் அற என்னை இழந்த நலம் சொல்லாய் முருகா'' என அருணகிரியார், கந்தர் அனுபூதியில் பாடியதற்கேற்ப, பத்மாசனத்தில் இருந்த முதியவர் கண்விழித்து பார்த் தார். அரசரிடம் ''இப்பொழுது என்னை தொந்தரவு செய்யாதீர், அடியேன் நிர்மாணித்த கோவிலில் இப் பொழுதுதான் பிரதிஷ்டை நிகழ்ந்து கொண்டிருக்கிறது'' எனக் கூறினார்.

அரசன் ஒன்றும் புரியாது, சிறிது விளக்கமாக முழுவிவரங்களை கூறும்படி கேட்டான். பூசலாரும், தம் இதயத்திலேயே கோயில்கட்டியதையும், அது சமயம் பிரதிஷ்டை செய்த விவரத்தையும் விளக்கமாக அரசருக்கு கூறலானார்.

உடனே அரசன், மெய்ம்மறந்து, பூசலார் பாதத் தில் வீழ்ந்து வணங்கினார். அடியேன் பொன்னா லும், கல்லினாலும் நிறுவிய கோயிலை விட, உம் முடைய இதயக் கோயிலையே பெரிது என உவந்து, இறைவனே பிரதிஷ்டைக்கு வந்துள்ளார் என்றால், அடியவர் பால் வைத்திருக்கும் கருணையை என்ன வென்று புகழ்வது?

''இறைவரோ தொண்டருளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே''

எனும் மூதுரைவாசகம் அடியேன் அறிவுக்கு உணவு அளித்ததுபோல் பிரேமை உண்டாயிற்று. அமர்ந்த கோலத்தில் பூசலார் இதயத்தில் இறைவன் காட்சி கொடுப்பதை ஆலயத்தில் பஞ்சலோகத்தில் வடித் துள்ளதைக் காணலாம்.

பூசலாரும், திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை, என் உள்ளே தேடிக்கண்டு கொண்டேன் எனக் கூறி கண்ணீர்மல்க துதிசெய் தார். இத்தகு சீலம் வாழ்ந்த பூசலாரைப்,

''நீண்ட செஞ்சடை யினார்க்கு
நினைப்பினால் கோயிலாக்கி
பூண்ட அன்பு இடையறாத
பூசலார் பொற்றாள் போற்றி''


எனச் சேக்கிழாரே புகழ்ந்து பாடியுள்ளது மிகவும் போற்றத்தக்கது. இதனால் குற்றமற்ற பூசலார் மனத் தினால் முயன்று கட்டிய கோயில், காஞ்சியில் இராஜசிம்மனால் அமைத்த கற்றளியிலும் சிறந்ததாக இறைவன் கருதுகிறான் என்பது வரலாறு.

இத்தகு அற்புதங்கள் உண்மையில் நடந்ததா? நடந்திருக்குமா? என்றெல்லாம் கருதுபவர்களை, ஆன்மீகச் சக்கரம் சுழல, ஊற்றப்படும் எண்ணைக்கு நிகரானவர்கள் எனக் கருதுதல் வேண்டும். இத்தகு ஆராய்ச்சியில் காலம் கழிப்பதை விடுத்து, அவற்றில் பொதிந்துள்ள ஆன்மீகப் பயன்பாட்டைத் தேடி வெளிப் படுத்துவதையே அறிஞர்கள் தம் கடமை யாகக் கருதிடல் வேண்டும்; கருதுகிறார்கள்.

திருநின்றவூருக்கு, இன்றைய நாளில், மின்சாரப் புற நகர்ரயிலிலோ, பேருந்து மூலமாகவோ சென்னையி லிருந்து செல்ல வசதியுள்ளது. காஞ்சிக்கு வடகிழக்கே 32 கி.மீ. தொலைவில் உள்ளது. ரயிலடியிலிருந்து தெற்கு நோக்கி ஒன்றரை கி.மீ. (1 மைல்) தூரம் செல்ல வேண்டும். இன்றைய நாளில், திருநின்றவூர் என்பது திண்ணனூர் என மக்களால் மருவி வழங்கப் படுகிறது.

பூசலார் ஆலயம் செல்லும்முன்பே, முதலில் பெரிய கோபுரத்தோடு கூடிய கோயில் இருக்கும், அருள்மிகு பக்தவத்சலர் வழிமறிப்பார். நமக்குத்தான் சைவ வைணவபேதம் கிடையாதே! வழி மறிக்கும் பக்தவத்சலரையே தரிசிப்போம்.

தெய்வப் பொலிவோடு செல்வமும் செழித்து விளங்கியதால் இத்தலம் திருநின்றவூர் என வழங்க லாயிற்று எனப் பலரும் கூறக்கேட்டேன்.



அருள்மிகு பக்தவத்சலர் கோயிலிலிருந்து கிழக்கே சிறிது தொலைவிலேயே பூசலார் ஆலயத்தைக் காண லாம். அன்றைய நாளில் கோபுரம் ஏதுமின்றி தகர கொட்டகையிலிருந்து, பின் வந்தவர்கள் சிறு கோயிலாகக் கட்டியுள்ளனர்.

இக்கோயிலில் வீற்றிருப்பவரே அருள்மிகு இருதய லாயஈஸ்வரர், துணைவியார், அருள்மிகு, மரகதாம்பிகை. கர்ப்பக் கிரகத்துக்குள்ளேயே உள்ள சிவலிங்கத் திருமேனிக்கு இடப்பக்கத்தில், கற் சிலையினாலான, பூசலார் திருமேனியை நின்ற கோலத்தில், (படத்தில் உள்ளதுபோல) காணலாம்.

அத்தாட்சிக்கு, பிரகாரத்தில், இராஜசிம்மன் உருவச் சிலையும் காணலாம். பிரகாரத்தின் தெற்கு மதிலில் தனியாக உள்ள சிற்பத்தில், பூசலார் மனக் கோயில் கட்டியிருப்பதைச் சித்தரித்துள்ளனர். உள் பிரகாரத்தில் ஏனைய தெய்வங்கள் நிறுவியிருந்த போதிலும், இவர்களை விஞ்சிவிடும் விதத்தில், பக்தவத்சலராம் மகாவிஷ்ணுவே மோகினி உருவத் தில் பஞ்சலோகத்தினாலான சுமார் 18 அங்குலம் உயரத்தில் காட்சி கொடுப்பதை காணலாம். நேர்த்தி யான உருவம் மோகினியின் முன்னழகைவிட படத் தில் தந்துள்ளதுபோன்று பின் அழகு (ஆம், பின்ன லழகு) தான் வெகு அற்புதம். நீண்ட நேரம் அதன் அழகை கண்டு களிக்கலாம்.

இவ்வாலய இறைவன், அன்று பூசலாரின் இதயத்தில் ஒளித்திருந்ததுபோல், இன்று நின்றவூரில் ஓர் ஒதுக்கு புறத்திலேயே வீற்றிருப்பதை தேடிப் பிடித்து, திருப்பணி செய்திருக்கிறார்கள்.

இவ்வூரின் கண் நிகழ்ந்த மற்றுமோர் வரலாற் றினை உங்களோடு இத்தருணத்தில் பகிர்ந்து கொள்வது சிறப்பாகும்.

இவ்வூரில் வசித்த சங்கீதப்பிரியர், கொடை வள்ளல் என அழைக்கப்படும் காளத்திவாணர், தமிழறிஞர்களையும் சங்கீத பாடல்களையும், சிவ னடியார்களையும் ஆதரித்து வந்தார்.

வெகுநாட்களாகவே வறுமையில் வாடிய புலவர் ஒருவர், திருநின்றவூர் சென்றால், தமது புலமைக்கு ஏற்ற சன்மானம் கிடைக்குமென நினைத் தார். உடனே புறப்பட்டு விட்டார். நடுவழியில் இருட்டி விட்டதால், அங்குள்ள ஒரு சத்திரத்தில் தங்க நேர்ந்தது. அது சமயம் அங்குள்ளவர்களும், காளத்தி வாணரின் கொடையையும், ரஸிகத்தன்மையும் பாராட்டி பேசுவதை எல்லாம் கேட்டறிகிறார். அது சமயம் ஒரு நம்பிக்கை இவருக்குப் பிறக்கிறது. மறு நாள் காலை காளத்தி வாணரைக் கண்டதும், தன் வறுமை, தன்னை விட்டு தொலைதூரத்தில் ஓடிவிடுமே. ஐயோ பாவம் அது இன்றிரவு ஒரு வேளையாவது நம்மிடம் இருந்துவிட்டு போகட்டுமே என்று பரி வுடன் நினைக்கிறார், தன்னை இதுகாறும் தொடர்ந்து வந்த வறுமையின்பால் ஏற்பட்ட பரிவு, ஒரு பாட்டாகவே வெளிவருகிறது அன்றிரவு சத்திரத்தில்.

நீளத்திரிந்து உழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக்கு இருப்பாயோ? நல்குரவே! காளத்தி
நின்றைக்கே சென்றக்கால், நீஎங்கே! நான் எங்கே!
இன்றைக்கே சற்றே இரு''

என்பது. ஆம், இன்றைக்கே நாமும் திரு நின்றவூர் செல்வோம். நாமும் நினைப்பினால் கோயில் அமைத்த பூசலாரை நினைத்துக்கொண்டே, அங் குள்ள பக்த வத்சலரை, எம்மைப் பெற்றதாயாரை, இருதயாலீஸ் வரரை, உலகத்தையே ரட்சிக்கும் அன்னை மரகதாம்பிகையை வணங்குவோம்! அதுவரையில் நாம் செய்த பழவினைகளும் நம்மோடு இருந்து விட்டு போகட்டுமே என்று அவைகளிடம் கொஞ்சம் அனுதாபமும் காட்டலாம் தானே!

❖❖❖

# மனிதப் பிறவியின் நோக்கம்

- முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி, மதுரை

முன்னுரை

உயிர்கள் நால்வகைத் தோற்றம், ஏழ்வகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்ச யோனிபேதங்கள் உடையவை. ஏழ்வகைப் பிறப்புக்களுள் மனிதப் பிறப்பே மாண்புடையது.

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'' என்கின்றார் ஔவையார். கிடைத்தற்கரிய இம்மனிதப் பிறவி பெறுவது கடலைக் கையினால் நீந்திக் கரைசேர்ந்தாற் போன்றது என்று சிறப்பிப்பார் அருணந்திசிவாசாரியார், (சிவஞானசித்தியார் சுபக்கம், செய்யுள்; 180).

''மானுடப் பிறவி தானும் வகுத்தது மன வாக்கு
காயம்
ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ
வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை
அர்ச்சிப்பர்
ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும்
உணரார் அந்தோ''

(சிவஞான சித்தியார் சுபக்கம், செ. 182)

என்கிறார் அருணந்திசிவாச்சாரியார். மனிதப்பிறவியின் நோக்கமே மனம், வாக்கு, காயத்தால் சிவனை வழிபடுவதுவே. தேவலோகத்திலுள்ள தேவர்கள் கூட இப்பூவுலகிற்கு வந்தே அரனை அர்ச்சித்து வழிபடுகின்றனர். ஆனால் ஊனுடம்பு எடுத்து உழலும் ஊமரான மனிதர்கள் இறைவழிபாடு செய்யாது காலத்தை வீணாகக் கழிக்கின்றனரே! அந்தோ பரிதாபம்! என்று இறைவழிபாடு செய்யாத மானிடர்களை நோக்கி இரங்குகின்றார் அருணந்தி சிவாசாரியார். திருநாவுக்கரசர் நம் உடலுறுப்புகள் ஒவ்வொன்றையும் இறைவனை வழிபடப் பயன்படுத்த வேண்டும் என்று திரு அங்கமாலை என்று ஒரு தனிப்பதிகமே பாடியுள்ளார். வள்ளலாரும் வழிபடா உறுப்புக்களின் இழிவையும், வழிபடுவதால் அவை அடையும் மேன்மையையும் தம் திருவருட்பாவில் எடுத்துரைக்கின்றார். அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தலை

பார்வையில்லாத கண்ணும், கேட்கும் திறனில்லாத செவியும், பேச இயலாத வாயும் எவ்வாறு பயனில்லாதனவோ, அது போல எண்குணமுடைய இறைவனை வணங்காத தலை இருந்தும் பயனற்றதே என்று,

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'' (திருக்குறள், 9)

என வள்ளுவர் கூறுகின்றார்.

திருநாவுக்கரசர்,

''தலையே நீ வணங்காய் - தலை மாலை
தலைக்கணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனை தலையே
நீ வணங்காய்''

(திரு அங்கமாலை 4 : 9 : 1)

என்று தலையை இறைவனை வணங்கும்படிப் பணிக்கின்றார்.

இறைவனின் திருவடிகளை வணங்கவே நமக்குத் தலை கிடைத்துள்ளது.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்''

(5 : 203 : 7)

என்று திருநாவுக்கரசரும்,


''வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய்
வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடி யார் கூட்டமும் வைத்து
எம்பெருமான்''

(திருப்பூவல்லி, செ. 7).

என்று மாணிக்கவாசகரும் கூறுகின்றனர்.

''முடை நாற - ஊன்றா
மலக்கூடை ஏற்றுகினும் மாணாதே தென்பால்
தலக்கூடல் தாழாத் தலை''

(திருவருட்பா, சிவநேச வெண்பா, செ. 28)



கூடல் இறைவனை வணங்காத தலை முடை நாறுகின்ற மலக்கூடையைச் சுமக்கும் தலையை விட இழிந்தது என்று இறைவனை வணங்காத் தலையைப் பழிக்கின்றார் வள்ளலார்.

இறைவனை வணங்காத தலை மறுபிறப்பில் சுடுகாட்டில் பிணம் எரிக்க விறகு சுமந்து துன்புறும்,

''எங்கள் பெருமான் உனை வணங்காத மூடர் தலை
இகழ் விறகு எடுக்கும் தலை''

(திருவருட்பா, தெய்வமணிமாலை, செ. 18)

என்று பழித்தும்,

இறைவனை வணங்கிய தலை மறுபிறப்பில் மணிமுடி பூண்டு வல்லோரும் வணங்கும் பெருமை யுடையதாய் விளங்கும் என,

''அப்ப நின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்து ஓங்கி வாழும் தலை''

(தெய்வமணிமாலை, செ. 19)

என்று போற்றியும் வள்ளலார் கூறுகின்றார்.

**கண்**

''கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட
கண்டன் தன்னை
எண்டோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ''

(4 : 9 : 2)

என்று நாவுக்கரசர் நஞ்சுண்ட கண்டனான இறைவனை, எண்தோள்கள் வீசி நடனமாடும் தலைவனைக் கண்டு களிக்குமாறு கண்களுக்குக் கட்டளையிடுகின்றார்.

''வெங்கோடை யாதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கு அன்றோ - எங்கோ
நின்
சீர் சிந்தாச் சேவடியின் சீர்கேட்டும் ஆனந்த
நீர்சிந்தா வன்கண் நிலை''

(சிவநேச வெண்பா, செ. 23).

இறைவனின் சேவடியினைப் புகழக் கேட்டவுடன் கண் ஆனந்தக் கண்ணீர் சொரிதல் வேண்டும். அவ்வாறு சொரியாத கண், வெவ்விய கோடை காலத்து வெயிலால் மழைநீர் வறண்டு உலர்ந்துள்ள ஈரமில்லாத ஓடை போன்றது என்று கண்ணின் வன்கண்மையைப் பழிக்கின்றார் வள்ளலார்.

''தெண்ணீர் முடியனைக் காணார் தங்கண்
இருள்சேர் குருட்டுக்
கண்ணீர் சொரிந்த கண் காசக்கண்
புன்முலைக்கண் நகக்கண்

புண்ணீர் ஒழுகும் கொடுங்கண் பொறாமைக்கண்
புன்கண் வன்கண்
மண்ணீர்மை உற்ற கண் மாமணி நீத்த கண்
மாலைக்கண்ணே''

(திருவருள் முறையீடு, செ. 142)

என்று இறைவன் கழல் கண்டு களிக்காது, உலகப் பொருட்களைக் கண்டு களிக்கும் கண்களைப் பல வாறாகப் பழிக்கின்றார் வள்ளலார்.

''கந்தமிகு நின்மேனி காணாத கயவர் கண்
கலநீர் சொறிந்த அழுகண்''

(தெய்வமணிமாலை, செ. 18)

''மெய்ய நின்திருமேனி கண்ட புண்ணியர் கண்கள்
மிக்க ஒளிமேவு கண்கள்''

(தெய்வமணிமாலை, செ. 19)

இறைவனின் திருமேனியைக் காணாதவர்கள் கயவர்கள். அவர்கள் கண் மறுபிறப்பில் துன்பத்தால் அழும். இறைவனின் திருமேனியைக் கண்டு வணங்குபவர்கள் புண்ணியர்கள். அவர்கள் கண் நல்ல ஒளியுடையதாய் நலத்துடன் விளங்கும் என்று வள்ளலார் கூறுகின்றார்.

## செவி

கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள் (இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே என்கின்றார் வள்ளுவர். *(குறள், 418)*

''செவிகாள் கேண்மின்களோ - சிவன் எம்மிறை
செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ''

(4 : 9 : 3)

செம்பவளமேனி சிவபெருமானின் புகழையே எப்போதும் கேட்கும்படி செவிக்குத் திருநாவுக்கரசர் அறிவுறுத்துகின்றார்.

இறைவனின் புகழ் புகாத செவி, அவன் திருவுலாவைக்கண்ணாற் காண ஒண்ணாது அடைக்கும் கதவைப் போன்றது என்கின்றார் வள்ளலார். அத்தகைய செவியைத் ''துளையாச் செவி'' என்கின்றார் (சிவநேச வெண்பா, செ. 25). மேலும் மற்றோர் இடத்தில்,

''கண்ணுதலான் புகழ் கேளார் செவி பொய்க்கதை
ஒலியும்
அண்ணனுற மாதரு மைந்தரும் கூடி அழும் ஒலியும்
துண்ணெனும் தீச்சொல் ஒலியுமழ் அந்தகன்
தூதர்கள் மொத்
துண்ணுற வா என்ற உரப்பொலியும் புகும் ஊன்
செவியே''

(திருவருள் முறையீடு, செ. 143)

என்று நெற்றிக்கண்ணுடைய சிவபெருமானின் புகழைக் கேட்காத செவி, பொய்யுரைகளையும், இறந்தோரைக் கண்டு இருப்போர் கூடி அழும் ஒலியையும், தீச்சொல்லையும், எம தூதர்கள் விரைந்து வா என மொத்தி அழைக்கும் உரத்த ஒலியையும் கேட்கும் ஊன் செவியே என்று செவியைப் பழிக்கின்றார் வள்ளலார்.

''கடவுள் நின் புகழ்தனைக் கேளாத வீணர் செவி
கைத்திழவு கேட்கும் செவி''

(தெய்வமணிமாலை, செ. 18)

''வேல நின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச் சுபம் கேட்கும் செவி''

(தெய்வமணிமாலை, செ. 19)

இறைவனுடைய புகழைக் கேளாத செவி இழப்பு, வேதனை, மரணம் போன்ற செய்திகளைக் கேட்டுத் துன்பமுறும். இறைவனின் புகழைக் கேட்கும் செவி எப்பொழுதும் மங்கலமான, சுபமான செய்திகளையே கேட்டு இன்பம் பெறும் என்கின்றார் வள்ளலார்.

## மூக்கு

''மூக்கே நீ முரலாய் - முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்''

(4 : 9 : 4)

என்று திருநாவுக்கரசர் மூக்கிற்கு அறிவுறுத்துகின்றார். (முரலுதல் - ஒலித்தல்) தியானம் செய்யும் போது மூக்கு வெளியிடும் காற்று இறைவனுடைய நாமத்தை மென்மையாக ஒலிக்க வேண்டுமாம். மெய்யெழுத்தில் மெல்லினம் மூக்கினால் ஒலிக்கப்படும்.

வள்ளலாரும்,

''புல்லங்கண நீர்ப் புழை என்கோ புற்று என்கோ
சொல்லும் பசு மண் துளை என்கோ - சொல்லுஞ்சீர்

வியாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின்
நல்விசைதான்
தோயாத நாசித் துளை''
(சிவநேச வெண்பா, செ. 26)

என்கின்றார். இறைவனைப் பிஞ்ஞகன் என்று பெயரிட்டும் அழைப்பர். அப்பெயரில் அமைந்துள்ள மெல்லெழுத்தின் நல்லிசை பொருந்தாத மூக்குத் துளையை இழிந்த சாக்கடைநீர் செல்லும் துவாரம் என்பேனோ, புற்று என்பேனோ, அல்லது வெறும் சரமண்ணில் இருவிரல்களை நுழைத்துத் துவாரம் செய்தது போல் உள்ளது என்பேனோ, என்னென்பேன் என்று இறைவன் பெயரை ஒலிக்காத மூக்கை இழித்தும் பழித்தும் பேசுகிறார் வள்ளலார்.

**வாய்**

திருநாவுக்கரசர், வரயே! நீ இறைவனை வாழ்த்திப் பேசுவாயாக. யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவரும், பேய்கள் வசிக்கின்ற சுடு காட்டில் நடனம் புரிபவருமான அப்பெருமானை வாயே நீ வாழ்த்துவாயாக என்,

''வாயே வாழ்த்து கண்டாய் - மத யானை
உரிபோர்த்துப்
பேய் வாழ் காட்டகத்து ஆடும் பிரான்தனை வாயே
வாழ்த்து கண்டாய்
(4 : 9 : 5)

என்கிறார்.

வள்ளலார்,

''வாய்அன்றேல் வெம்மலஞ்செல் வாயன்றேல்
மாநரக
வாய்அன்றேல் வல் வெறிநாய் வாய் என்பாம் -
தாய் என்றே
ஊழ்த் தாதா ஏத்தும் உடையாய் சிவன் என்றே
வாழ்த்தாதார் நாற்றப் பாழ்வாய்''
(சிவநேச வெண்பா, செ. 24)

என்கிறார். சிவா என மொழிந்து வாழ்த்தாதாருடைய வாய் தீ நாற்றம் நாறும் பாழான வாய். வெவ்விய மலம் கழியும் வாயுமன்று; பெரிய நரகத்தின் வாயுமன்று; வன்மை கொண்ட வெறிநாயின் வாய் என்று வள்ளலார் இகழ்கின்றார்.

சிவாய நம என ஏத்துதற்கும் உயிர்கள் தவம் செய்திருக்க வேண்டும்.

''நானேயோ தவம் செய்தேன் சிவாய நம
எனப் பெற்றேன்'' (திருவேசறவு, செ. 10)

என்கிறார் மாணிக்கவாசகர்.

''திருவாய் பொலியச் சிவாய நம என்று
நீறு அணிந்தேன்'' (4 : 94 : 6)

என்கின்றார் திருநாவுக்கரசர்.

சிவ சிவ என வாழ்த்தும் வாய் நறுமணம் கமழும் மங்கலத் திருவாய்.

''எந்தை நினை வாழ்த்தாத பேயர் வாய் கூழுக்கு
ஏக்கற்றிருக்கும் வெறு வாய்''
(தெய்வமணிமாலை, செ. 18)

''பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடையாது'' என்பது உலகியல் பழமொழி. இங்கு வள்ளலார் மெய்ப்பொருளாம் இறைவனை எந்தை என நினைத்து வாழ்த்தாத பேயர்வாய் கூழ் கூட கிடைக்காது ஏங்கி நிற்கும் என்கின்றார்.

மேலும் மற்றொரு பாடலில்

''நா அலங்காரம் அற வேறு புகழ் பேசி நின்
நற் புகழ் வழுத்தாத பேர்
நாய்ப்பால் விரும்பி ஆன் தூய்ப்பாலை நயவாத
நவையுடை பேயராவார்''
(தெய்வமணிமாலை, செ. 26)

என்று இறைவனைப் புகழாதார்களைப் பழிக்கின்றார்.

''ஐய நின் சீர் பேசு செல்வர் வாய் நல்ல தெள்
அமுது உண்டு உவந்த திருவாய்''
(தெய்வமணிமாலை, செ. 19)

இறைவனின் புகழ் பேசும் வாய் நல்ல தெள்ளிய அமுதத்தை உண்டு மகிழும் என்கின்றார் வள்ளலார்.

**நெஞ்சு**

மென்மையான சடைமுடியை உடையவனை, இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவனை, உமாதேவியின் மணாளனை நெஞ்சே நீ நினைத்துப் போற்றுவாயாக என,

''நெஞ்சே நீ நினையாய் - நிமிர் புன்சடை
நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ
நினையாய்'' (4 : 9 : 6)

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க'' (சிவபுராணம், வரி, 2)

என்கின்றார் மாணிக்கவாசகர்.

''கல்லென்கோ நீரடைக்கும் கல்லென்கோ
கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ -
சொல்லென்கோ
இன்றாலெனிலோ எடுத்தாள்எம் ஈன்றாள்நேர்
நின்தான் நினையாத நெஞ்சு''

(சிவநேச வெண்பா, செ. 29)

என்கின்றார் வள்ளலார். ஈன்றாள் போல் நம்மை எடுத்தாளும் இறைவனை நினையாத நெஞ்சு கல் என்கின்றார். அவர்கட்கு வாழ்வில் எந்த பலன்களும் உண்டாகாது ஆதலால்'' நீர் அடைக்கும் கல்'' என்கின்றார். இறைவனை நினைந்து வழிபடுதல் என்பது நமக்கு இந்த உடம்பு, கருவி, கரணங்களைத் தந்த இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துதல் ஆகும். அவனை நினையாத நெஞ்சு நன்றி மறத்தல் முதலிய தீய எண்ணங்கள் நிறைந்து இருண்டு கிடப்பதால் 'கருங்கல்' என்கின்றார். உள்கும் உணர்வின்றி உறைப்புண்டிருத்தலால்'' காழ் வயிரக் கல்'' என்கின்றார்.

இறைவனை நினையாத நெஞ்சு, எனக்குச் சுகம் இல்லை; உண்ணச் சோறு இல்லை, உடுத்தத் துணி இல்லை, வீடு இல்லை, பொருள் இல்லை, வழங்க வள்ளலும் இல்லை, இவ்வுலகில் எனக்கு எதுவுமே இல்லை என்று இரங்கி நிற்குமாம்.

''சுகம் இலையே என்று உடையானை எண்ணலர்
தம் கல் நெஞ்சம்
சுகம் இலையே உணச் சோறு இலையே கட்டத்
தூசு இலையே
அகம் இலையே பொருளாஇலையே வள்ளலார்
இலையே
இகம் இலையே ஒன்றும் இங்கு இலையே என்று
இரங்கு நெஞ்சே''

(திருவருள் முறையீடு, செ. 145)

என்கின்றார். இலையே என்பது இல்லையே என்பதன் இடைக்குறை.

''பந்தமற நினை எணாப் பாவிகள் நெஞ்சம்
பகீரென நடுங்கு நெஞ்சம்''

(தெய்வமணிமாலை, செ. 18)

என்று இறைவனை நினையாத நெஞ்சைப் பழித்தும்,

''துய்ய நின்பதம் எண்ணும் மேலோர்கள் நெஞ்சம்
மெய்ச்
சுகரூப மான நெஞ்சம்''

(தெய்வ மணிமாலை, செ. 19)

என்று இறைவனை நினைக்கும் நெஞ்சை வாழ்த்தியும் பாடுகிறார் வள்ளலார். இறைவனை எண்ணாதாரைப் பாவிகள் என்றும், எண்ணுபவர்களை மேலோர்கள் (புண்ணியம் செய்தவர்கள்) என்றும் வள்ளலார் கூறுகின்றார். திருஞானசம்பந்தப் பெருமானும் வலஞ்சுழி வாணனை வாயார பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபட தன் நெஞ்சம் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று பாடுவது (2 : 242 : 1) இங்கு நினைவு கூர்தற்குரியது.

வள்ளலார், மனிதர்கள் சோறு உண்ணும் போதும் இறைவனின் திருவடிகளைச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு நினையாது பாழ்த்த வயிற்றில் சும்மா அடைக்கின்ற சோறு நஞ்சை விடக் கொடியது என்கின்றார் (சிவநேச வெண்பா, செ. 30). இறைவனை நினைந்து உண்ணும்போது உணவைத் தீண்டும் கை, மென்று உண்ணும் வாய், சென்று அடையும் வயிறும் சிவமயம் ஆகும். அவ்வுணவு உடலுக்கும், உயிர்க்கும் ஆற்றல் விளைவிக்கும். இறைவனை நினையாது உண்ணும் உணவு அருளாற்றல் பயக்கும் அமுதமாகாது, சோர்வையும், நோயையும் உண்டாக்கும்.

இறைவனை நினையாதார் உண்ணும்போது சோற்றால் தொண்டையில் விக்கல் எடுத்து, மார்பு அடைப்புண்டு, இறப்பாராயின் அதுவும் நன்றே என்கின்றார் வள்ளலார் (சிவநேச வெண்பா, செ. 31).

**கை**

நறுமணம் மிகுந்த மலர்களைத் தூவி, பாம்பினை அரையில் கட்டிய பரமனாகிய சிவபெருமானைக் கைகளே கூப்பித் தொழுவீர்களாக என,

''கைகாள் கூப்பித் தொழீர் - கடி மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்'' (4 : 9 : 7)

என்கின்றார் நாவுக்கரசர்.

வள்ளலார், உயிரைப் பற்றி நிற்கும் மலமாசை நீக்கியும், அறிவொளி நல்கியும், தலை குனித்தாடும் பெருமானே! நின் திருக்கோயில் கண்டும் தொழாத கைகள் மறுபிறப்பில், பிறர் நகைக்க மனைதோறும் போய் பல்லை இளித்து, அரைக்காசும் பெற விரித்து நீட்டி துன்பமடையும் என,

''ஏசும் பிறர்மனையில் ஏங்கஅவர் ஈயும்அரைக்
காசும் பெற விரிக்கும் கை கண்டாய் - மாசுந்த
விண்டும் சிரங்குனிக்கும் வித்தகனே நின் தலத்தைக்
கண்டும் சிரம்குவியாக் கை''

(சிவநேச வெண்பா, செ. 22)

என்கின்றார்.

''பரம நின் திரு முன்னர் குவியாத வஞ்சர்கை
பலியேற்க நீள் கொடுங்கை''

(தெய்வமணிமாலை, செ. 18)

என்று இறைவனை இப்பிறவியில் கும்பிடாத கை மறுபிறவியில் பிச்சை எடுத்துத் திரியும் என்கின்றார் வள்ளலார்.

இறைவனைத் தொழும் கைகள் மறுபிறப்பில் தன்னிடம் யாசிப்பவர்கட்குப் பொற்காசுகளை அள்ளிக் கொடுக்கும் பெருமையுடன் விளங்கும் என,

''தோன்றல் நின் திருமுன் குவித்த பெரியோர் கைகள்
சுவர்ணம் இடுகின்ற கைகள்''

(தெய்வமணிமாலை, செ. 19)

என்று வள்ளலார் இறைவனைக் கைகூப்பித் தொழுதலின் மாண்பினை உணர்த்துகின்றார்.

**உடல்**

இறைவனின் திருக்கோயிலை வலம் வந்து, கைகளால் மலர் தூவி அர்ச்சித்து வழிபடல் வேண்டும். அவ்வாறு செய்யாத உடம்பால் ஒரு பயனும் இல்லை என்பது புலப்பட,

''ஆக்கையால் பயன்என் - அரன் கோயில்
வலம்வந்து
பூக்கையால் அட்டி போற்றி என்னாத இவ்
ஆக்கையால்
பயன் என்'' (4 : 9 : 8)

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார்.

வள்ளலார்,

''உப்பிருந்த ஓடோ ஓதியோ உலரப் பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச் சுமையோ -
செப்பறியேன்
கண்ணப்பருக்குக் கனியனையாய் நிற்பணியாது.
உண்ணப் பருக்கு உடம்பு''

(சிவநேச வெண்பா, செ.20)

என்று சிவனைச் சிந்தியாத உடம்பை இகழ்கின்றார். சிவ நினைவும் சிவப்பணியும் செய்யாத உடம்பை உப்பிருந்த ஓடோ என்கின்றார். வெயிலில் காய்ந்தால் உடம்பில் வியர்வை படிந்து உப்புப் பூக்கும். ஓதி என்ற மரம் ஒன்றுக்கும் பயன்படாதது போல அத்தகைய உடம்பு பயன்படாது. அவர்கள் உயிரிருந்தும் உயிரில்லாதவர் போலாவர் என்பதைப் புலப்படுத்த ''உலரப் பிணமோ'' என்றார். உள்ளே வெம்மையும், உடலில் மயிரும் கொண்டுள்ளதால் ''வெப்பிருந்த காடோ'' என்றும், இறைபணி செய்யாது இரு வினைகளைப் பெருக்கிக் கொண்டே செல்வதால் ''வினைச் சுமையோ'' என்றும் பழித்து அவ்வுடம்பு உண்ணப் பருக்கும் வெறும் ஊன் உடம்பே என இகழ்கின்றார். மனிதர்களாய்ப் பிறந்தோர் ஊனினைச் சுருக்கி உள்ளொளியைப் பெருக்க வேண்டும். அதுவே உலப்பிலா ஆனந்தம் தரும்.

**கால்**

கால்களின் பயன் நஞ்சுண்டு கறுத்த கண்டத்தையுடைய இறைவன் எழுந்தருளியுள்ள கோயிலை வலம் வருதலாகும். அழகிய கோகர்ணம் என்னும் திருத்தலத்தை வலம் வர வேண்டும். அவ்வாறு வலம் வராத கால்களால் ஒரு பயனும் இல்லை என்பது புலப்பட,

''கால்களால் பயன் என் - கறைக்கண்டன்
உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர்ணம் சூழாக் கால்களால்
பயன் என்'' (4 : 9 ; 9)

என்கின்றார் திருநாவுக்கரசர்.

வள்ளலார் இறைவனின் திருக்கோயிலைக் கண்டும் வலஞ்செய்யாத கால், இடாதாரின் இல்லம் தோறும் சென்று இரந்து எலும்பு தேய, நெடிய காற்றுப் போல திரிந்து வருந்தும் என்பதை,

''ஏலார் மனைதொறும் போய் ஏற்று எலும்பு
தேய நெடுங்
காலாய்த் திரிந்து உழலும் கால்கண்டாய் - மாலாகித்
தொண்டே வலஞ்செய் கழல் தோன்றலே
நின்கோயில்
கண்டே வலம் செய்யாக் கால்''

(சிவநேச வெண்பா, செ. 21)

என்று கூறுகின்றார்.

**முடிவுரை**

இவ்வாறு திருநாவுக்கரசரும், வள்ளலாரும் மனிதப் பிறவியின் நோக்கமே இறை வழிபாடு செய்து உய்வடைய்தல் என்பதை அழகுடன் உலகோர்க்கு அறிவுறுத்துகின்றனர். இதனை உணரும் ஒவ்வொருவரும் அந்நெறியில் ஒழுகி உய்வார்களாக.

''கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'' (குறள், 2)

''ஊன் அடைந்த உடம்பின் பிறவியே
தான் அடைந்த உறுதியைச் சாருமால்
தேன் அடைந்த மலர்ப் பொழில் தில்லையுள்
மாநடம் செய் வரதர் பொற்றாள் தொழ''

- பெரியபுராணம், செ. 2.

திருச்சிற்றம்பலம்.

* * *

# தீராப் பிணி தீர்க்கவல்ல வைத்தியநாதர்

**ஜி. வெங்கடேசன்,** M.E., M.I.E.,
செயற் பொறியாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.

*அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கிய ஞானப்புகலுடையோர் உள்ளத் தாமரையுள்ளிருக்கும் பெருமான். புறத்தே தன் உருவைக் கண்டு வழிபடுவோரது உடற்பிணி, உயிர்ப் பிணிகளை நீக்கி, உள்ளத்து இருளைப் போக்கி, இடர் பாவம் கெடுத்து, தெருளாத சிந்தைதனைத் தெருட்டி, சிவலோக நெறியறியச் செய்வான் வேண்டி மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி வைத்தியநாதன் என்னும் திருப்பெயருடன் எழுந்தருளியிருக்கும் தலம் வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள் ளிருக்கு வேளூராகும். இதனை மனத்தால் நினைப்பின் - வாயாற் கூறின் - தலையால் வணங்கின் வினை நீங்கும்; பாவம் மறையும்; இடரில்லை; உள்ளம் குளிரும் இன்பம் வரும்.*

''திறங்கொண்ட வடியார் மேல் தீவினை நோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்மம் உரைத்த பிரானமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்தன் வலிகருதி வந்தானைப்
புறங் கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.''

- திருஞான சம்பந்தர்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்புப் பெற்ற புண்ணிய தலம் புள்ளிருக்கு வேளூர் என்று போற்றப் பெறுகின்ற வைத்தீசுவரன் கோயில். புள், இருக்கு, வேள், ஊர் இவை பெருமானை வழி பட்ட காரணத்தால் புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் உண்டாயிற்று. (புள் - சடாயு, சம்பாதி எனும் பறவை கள்; இருக்கு - வேதங்கள்; வேள் - முருகன், ஊர் - ஊர்ந்து செல்லும் சூரியன் ஆகியோர் வழிபட்ட தால் இப்பெயர் ஏற்பட்டது).

''தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளா னார்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூரே''

என்ற திருஞானசம்பந்தர் தொடர்களாலும்

''புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கி தொழுமினே''

என்ற அப்பர் பெருமான் அடிகளாலும் சம்பாதி, சடாயு இருவரும் வழிபாடு செய்ததை அறியலாம்.

சடாயு, சீதாப்பிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணனுடன் போராடி உயிர் இழந்த செய்தியை

''மெய் சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்துப்
பொய் சொல்லா துயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே''

என்று திருஞான சம்பந்தரின் திருமுறையில் குறிக்கப் பட்டுள்ளது.


இறைவன் - வைத்திய நாதர்
இறைவி - தையல் நாயகி
குழந்தை - செல்வமுத்துக் குமரன்
தீர்த்தம் - சித்தாமிர்த்த தீர்த்தம்

## வைத்திய நாதர்

இத்தலத்தின் மூலவர் வைத்திய நாதர். இவர் சுயம்பு லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். பன்னிரு ஜோதிர் லிங்கங்களில் ஒன்றாக கூறப்பட்டிருக்கும் வைத்திய நாதம் இதுவாக இருக்கலாமென சிலர் கூறுவர். தீராத 4448 நோய்களைத் தீர்த்து வைக்க இவர் கயிலையினின்று இங்கு வந்தார் என்பது புராணம். ''தீவினைக் கோர் மருந்தாவான்'' என்று சம்பந்தரும் ''மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி தீரா நோய் தீர்த்தருள வல்லான்'' என்று அப்பரும், ''அருமருந்தாகி நின்ற ஆதிப்பிரான்'' என்று குமார குருபரரும் கூறுகின்றனர். இவர் மருத்துவராக மட்டு மின்றிப் பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் திகழ் கிறார். தீராவினை தீர்த்தருளிய தம்பிரானார் என்று ஒரு கல்வெட்டு இவரைக் குறிக்கிறது. சம்பாதியும் சடாயுவும் ஒரு காதம் சென்று பூக்கொணர்ந்து இறை வனைவழிபட்டதாக சம்பந்தர் பாடுகிறார்.

திருப்புகழில் அருணகிரிநாதர்

''உரத்துறை போதத் தனியான உனைச் சிறி தோத தெரியாது
மரத்துறை போலுற்றடியேனும் மலத்திருள் மூடிக் கெடலாமோ



பரத்துறை சலபத்தவர் வாழ்வே பணித்தபடி
வாழ்வுற்றருள்வோனே
வரத்துறை நீதர்க்கொருசேயே வயித்திய நாத
பெருமாளே''

என்று அருளியுள்ளார்.

## தையல் நாயகி

தையல் நாயகியை திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார், வாலாம்பிகை என்று கல்வெட்டுகள் குறிக்கும். வைத்தியநாதராக எம் பெருமான் கயிலையினின்று இங்கு வந்தபோது, பெருமாட்டி தையலம்மைக் கோலம் கொண்டு, தைல பாத்திரமும், சஞ்சீவியும், வில்வமண், மருந்தும் எடுத்துக் கொண்டு உடன் வந்து இங்கு கண்கண்ட தெய்வமாக உறைகிறாள். தைலம்மை என்ற பெயர் மருவி தையல்நாயகி என்று இருக்கலாம்.

## செல்வமுத்துக் குமாரசுவாமி

இத்தலத்தின் சிறப்புக்குரிய மூர்த்தி முத்துக் குமார சுவாமி ஆவார். வைத்திய நாதரின் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் இவரைக் கார்த்திகை தோறும் மண்டபத்திற்கு எழுந்தருளிவித்துச் சிறப்பான அபிஷேக ஆராதனை செய்வர். மாதந்தோறும் கார்த்திகைத் திருநாளில் நடைபெறும் சந்தனாபிஷேகம் கண்கொள்ளாக் காட்சியாகும். பல மாவட்டங்களிலிருந்தும் திரளான மக்கள் இந்நந்நாளில் வந்து வணங்கி கண்களாற் பொற்பயன் அடைந்தோம் என மகிழ்ந்து மன அமைதி பெற்றுச் செல்கின்றனர். இரவு பெருமான் தங்கத் தேரில் எழுந்தருளி பக்தர்கட்கு அருட் காட்சி அருள்கிறார்.

முருகப் பெருமான் கண்கண்ட தெய்வமாக அடியார்கள் வேண்டும் வரம் கொடுக்கும் அருள் வள்ளலாக திகழ்கிறார் என்பதனை

''தண்ணளி சுரந்தவர்கள் வேண்டிய வரம்
கொடுப்பான்
மெய்கண்ட தெய்வ மித்தெய்வமல்லால் புவியில்
வேறில்லை''

என்று குமரகுருபரர் அருளியுள்ளார்.

இங்கு முருகப் பெருமாள் செல்வமுத்துக் குமாரன் என்ற பெயரில் செல்லக் குழந்தையாக வளருவதால், இவரை இருப்பிடத்திலிருந்து வெளியே எழுந்தருளச் செய்கையில் நடை பாவாடை போட்டு, முன்னே தம்பிரான் சுவாமிகள் கும்பிட்டுச் செல்ல, விருதுகளுடன் குழந்தையை எடுத்துச் செல்வது போல் கொண்டு சேர்ப்பர்.

ஒவ்வொரு நாளும் இரவு 9 மணிக்கு முத்துக் குமரனுக்கு புழுகு, பச்சைக் கற்பூரம், சந்தனம், எலுமிச்சை பழம், அரும்பு முதலியவைகள் சார்த்தி, பால், பழம், பாற்சோறு வைத்து தீபாராதனை செய்வர். இத்தலத்தில் இது சிறப்பானது. பிள்ளைத் தமிழ்பாடி, தாலாட்டுபாடி முருகனை பள்ளி கொள்ள செய்த பின்னரே, சுவாமி, அம்பாளுக்கு அர்த்த ஜாம பூஜை நடைபெறும். இது பிள்ளையை உறங்கச் செய்தபின் தாய் தந்தையர் தாம் உறங்கச் செல்வதை ஒக்கும்.

## அங்காரகன்

இது அங்காரகன் தலம். இங்கு அங்காரகன் மூலவர் உற்சவர் ஆகியோர் உள்ளனர். செவ்வாய் கிழமை தோறும் மாலையில் ஆட்டுக்கடா வாகனத்தில் அங்காரகன் எழுந்தருளுவார். செவ்வாய் தொடர்பான தோஷங்கள் உடையவர்கள் இங்கு வந்து வழிபட்டு பயனடைவர்.

## ஜடாயு குண்டம்

இராமன் சடாயுவின் வேண்டுகோளின்படி சிதையடுக்கி ஜடாயுவின் உடலைத் தகனம் செய்த இடம் இங்குள்ளது. இந்த ஜடாயு குண்டத்திலுள்ள விபூதி நோய் தீர்க்க வல்லது. ஜடாயுவுக்கு திருமேனியும் இங்கு உள்ளது.

## சித்தாமிர்த தீர்த்தம்

இத்தலத்தில் பதினெட்டு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் அருள்மிகு தையல்நாயகி அம்மையின் சன்னதியின் எதிரே உள்ள சித்தாமிர்த தீர்த்தமே மிகவும் சிறப்புடையதாகத் திகழ்கிறது. கலியுகத்தில் சித்தர்கள் இறைவனுக்கு அபிஷேகித்த தேவாமிர்தம் இதில் கலந்தமையால், இதனை சித்தாமிர்த தீர்த்தம் என்பர். உடல் நோயையும் உள நோயையும் போக்கவல்ல சிறப்புடையது. இதன் பெருமையை குமரகுருபரர் அம்புலிப் பருவத்தில் சந்திரனை முருகப்பெருமானுடன் விளையாட வருக என அழைக்கிற பொழுது கயரோகமுடன் களங்கத்தையும் போக்கிட விரும்புவரேயானால், எம்பிரான் தன் வெண்ணீறும், திருச்சாந்துருண்டையும் இருக்க, வற்றாத இச்சித்தாமிர்த தீர்த்தத்துடன் சிறு துளி ஒன்றே போதும் என்பதனை

''திருமுன்னர் அள்ளியிடு வெண்சாந்து மற்றைத்
திருசாந்து நிற்க வற்றாத
சித்தாமிர்த்த தீர்த்தத்துறைக்குறுந் திவலை
ஒன்றே அமையுமானால்''

என்று கூறியுள்ளார். இதில் நீராடியதால் அங்காரகனின் செங்குட்டம் தீர்ந்தது. சதானந்தரின் சாபத்தால் இதில் இன்றளவும் பாம்பும் தவளையும் இல்லை.

## அற்புதங்கள்

நோய்களைத் தீர்ப்பதில் அன்று முதல் இன்று வரை இணையற்ற தலமாக இது திகழுகிறது. இங்கு அளிக்கப்படும் நேத்திரப்பிடி சந்தனமும், ஜடாயு குண்ட விபூதியும், திருச்சாந்துருண்டையும், சந்தனக் குழம்பும் தீராத நோய்களைத் தீர்க்கும் தெய்வீக மருந்துகளாகும். இத்தலத்திற்கு வந்து நோய் தீர்ந்தவர்கள் எண்ணிலர். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துச்சாமி தீட்சிதரே கண்பார்வை மங்கிய போது, முத்துக் குமரன் கனவில் அருளியபடி இங்கு வந்து கண்ணொளி பெற்று

''முத்துக் குமாரய்யனே பக்தர்க்கிரங்கும் மெய்யனே''

எனப்பாடியுள்ளார்.


இங்கு நாள் தோறும் காமிக ஆகம விதிப்படி ஆறுகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. பங்குனி மாதத்தில் பெருவிழா நடைபெறுகிறது. தை மாதத்தில் செல்வ முத்துக்குமார சுவாமிக்கு திருவிழா நடைபெறுகிறது. மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்திலும், சஷ்டி திதியிலும் முத்துக்குமாரருக்கு சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அம்பிகைக்கு ஆடிப்பூரம், நவராத்திரி முதலிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

''ஸவதீர்த்த ம்ருத்பஸ்ம ப்ருதங்கபாஜாம்
பிசாசதுக்காந்தி பயாபஹாய
ஆத்மஸ்வரூபாய சரீரபாஜாம்
ஸ்ரீ வைத்ய நாதாய நம: சிவாய.

தமது தீர்த்தமாகிய சித்தாமிர்த தீர்த்தத்தில் நீராடுதலாலும், திருக்கோயிலில் வழங்கப்படுகின்ற மருந்து உருண்டைகளாலும், விபூதியாலும், கோயிலிலுள்ள வேப்ப மரத்தின் அடியிலுள்ள மண்ணினாலும், பிசாசு, ரோகம் முதலான துக்கங்களையும், மனக்கவலைகளையும், பாவத்தையும் போக்குகின்றவராகவும், சரீரத்தை அடைந்தவர்களுக்கு அந்தராத்மாவாய் உள்ளவருமாகிய ஸ்ரீ வைத்யநாதப் பெருமானை வணங்கி வேண்டிய வரங்களைப் பெற்று இன்புறுவோமாக!


***

இராமேஸ்வரம் பிரசித்தி பெற்ற அதிநீண்ட பிரகாரம்



பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451

## அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில்



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.